

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்:10.8.1942 – முரசு:82 – ஒலி:102 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 05 – செவ்வாய்க்கிழமை 21 நவம்பர் 2023 – கோவை ★ ★ 12+8 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:82 - Issue 102: Thiruvalluvar Year - 2054 - Karthigai 05 - Tuesday 21 November 2023 - Kovai ★★ 12+8 Pages ₹5.00


### உச்சநீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு வந்தது!

# ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக - தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு!

## அரசின் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் வாதிட்டனர்!

**புதுடெல்லி, நவ. 21 -**

**ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக, தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. இவ்வழக்கில் ஆளுநரின் செயலால் 7 கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என தமிழ்நாடு அரசின் சார்பில் ஆஜராகிய மூத்த வழக்கறிஞர்கள் வாதிட்டனர்.**

அதன் விபரம் வருமாறு:–

மாநில அரசால் அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலதமாதப்படுத்தும் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடுகளை சட்டவிரோதம் என அறிவிக்க உத்தரவிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் தரப்பில் அண்மையில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பாக கடந்த 6ஆம் தேதி தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் அடங்கிய அமர்வின் முன், தமிழக அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர்களான அபிஷேக் மனு சிங்வி மற்றும் வில்சன் ஆகியோர் ஆஜராகி சில கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அதன்படி, தமிழ்நாடு அரசின் மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க உத்தரவிடக் கோரிய ரிட் மனு, நவம்பர் 10ஆம் தேதி விசாரணைக்காக பட்டியலிடப்பட்டது.

அவ்வாறே, நவ. 10 அன்று – ஆளுநர் ரவிக்கு எதிராக தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

”மசோதாக்களை கிடப்பில் போட்டு அரசின் செயல்பாடுகளை ஆளுநர் முடக்கி வைக்கிறார். பணி நியமனம் தொடங்கி எந்த ஒரு கோப்புகளுக்கும் அனுமதி கொடுக்க ஆளுநர் மறுப்புத் தெரிவிக்கிறார்; கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்யும் கோப்புகளைக் கூட கிடப்பில் போட்டு வைத்திருக்கிறார் என தமிழக அரசு மூத்த வழக்கறிஞர்கள் தனது வாதத்தை முன்வைத்தனர்.

அப்போது தமிழக அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் ஏ.எம்.சிங்வி, பி.வில்சன் ஆகியோர், “ஊழல் வழக்கில் சிக்கியுள்ள அரசு ஊழியர்கள் மீது நடவடிக்கை கோரும் கோப்பு, டி.என்.பி.எஸ்.சி. நியமனங்கள், சிறைவாசிகளை முன்கூட்டியே விடுதலை செய்வதற்கான ஒப்புதல் கோரும் கோப்புகளைக் கூட ஆளுநர் கிடப்பில் போட்டுள்ளார்” என்று தெரிவித்தனர்.

“மக்களின் பொது சுகாதாரம் தொடங்கி உயர் கல்வி விவகாரம் வரை எந்தக் கோப்புகளுக்கும், மசோதாக்களுக்கும் ஆளுநர் பதில் அளிக்கவில்லை என்றனர்.

அப்போது உச்சநீதிமன்றம், “அரசியல் சாசன சட்டப்பிரிவு 200ன் படி மாநில சட்டப்பேரவைகளில் நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் ஒப்புதல் கோரி அனுப்பப்படும் கோப்புகள் மீது அவர் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் முடிவு எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியது. இதனை இன்னும் விவரித்து தலைமை நீதிபதி சந்திரசூட் கூறுகையில், ”ஆளுநர் ஒரு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கலாம். ஒருவேளை அது நிதி மசோதாவாக இல்லாமல் இருந்தால் முடிவை நிறுத்தி வைக்கலாம் அல்லது அதில் திருத்தம் மேற்கொள்ளப் பரிந்துரைத்து அரசுக்குத் திருப்பி



அனுப்பலாம் அல்லது சட்ட மசோதாவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கலாம். ஆனால், எதுவுமே செய்யாமல் காலவரையின்றி மசோதாக்களை கிடப்பில் போட முடியாது” என்றார்.

அப்போது வழக்கறிஞர் சிங்வி, ”அதையே நாங்களும் கூறி வருகிறோம். மசோதாக்கள் மீது முடிவெடுக்கும்படி நாங்கள் 2020 ஜனவரி தொடங்கி இப்போது வரை ஆளுநரிடம் கெஞ்சிக் கொண்டிருக்கிறோம். தவறு செய்தோர் மீது நடவடிக்கை எடுக்க ஏதுவாக சில கோப்புகளில் கையெழுத்திட வேண்டி வருகிறோம். சில கைதிகளை நன்னடத்தையின் அடிப்படையில் தண்டனைக் குறைப்புக்கு பரிந்துரைக்க வேண்டி வருகிறோம். ஆனால், அவர் எதையுமே செய்வதில்லை” என்றார்.

அவரைத் தொடர்ந்து வழக்கறிஞர் வில்சனும் வாதிட்டார். அப்போது அவர், “ஆளுநர் செயல்படாமல் இருப்பதால் டி.என்.பி.எஸ்.சி.யில் 14 இடங்களில் தலைவர் உள்பட 10 பதவிகள் காலியாக உள்ளன. எத்தனையோ முறை கோரியும் ஆளுநர் அந்தக் கோப்பை இதுவரை கிடப்பில் போட்டிருக்கிறார்” என்று கவலை தெரிவித்தார்.

அதையடுத்து, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது.

அந்த நோட்டீஸில், ‘மக்களின் உரிமைகளைச் சிதைக்கும் வகையில் ஆளுநர் செயல்படுகிறார்’ என்ற தமிழக அரசின் மனுவுக்கு பதிலளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. இம்மாதம் 20ஆம் தேதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு வரும்போது மத்திய அரசின் அட்டர்னி ஜெனரல் அல்லது அவருக்குப் பதிலாக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத் தில் ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும்” என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் – ஆளுநர் ஆர்.என்.ரவி அவசரமாக, நீண்ட காலமாக கிடப்பில் வைத்திருந்த, 10 மசோதாக்களையும் கடந்த 13ந்தேதி அரசுக்குத் திருப்பி அனுப்பியதும் –

இதையடுத்து தமிழ்நாடு சட்டப்பேரவை 18.11.2023 சனிக்கிழமை அன்று அவசரக் கூட்டமாக கூட்டப்பட்டு ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு வேந்தர்களை அரசே நியமிக்கும் சட்ட மசோதாக்கள் உள்பட 10 மசோதாக்களையும் மீண்டும் சட்டப்பேரவையில் நிறைவேற்றி ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு அன்று மாலையே அனுப்பி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

---

### இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட

## நாகை - இராமநாதபுரம் மீனவர்கள் 22 பேர் விடுதலை!

### இலங்கை நீதிமன்றம் உத்தரவு!

கொழும்பு, நவ. 21 –

கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் நடுக்கடலில் கைது செய்வதும், படகுகள் உள்ளிட்ட உபகரணங்களை பறிமுதல் செய்வதும் தொடர்கதையாகி வருகிறது. இந்த விவகாரத்தில் ஒன்றிய பா.ஜ.க., அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் அலட்சியத்துடன் இருந்து வருகிறது.

இருப்பினும் தமிழ்நாடு அரசின் உரிய அழுத்தத்தின் பேரில், மீனவர்கள் படிப்படியாக மீட்கப்பட்டு வருகின்றனர். அந்தவகையில், அண்மையில் கடலில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்ட நாகை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த 22 மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்பேரில், இந்த மீனவர்களை இலங்கை நீதிமன்றம் விடுதலை செய்தது.

---

## உதகை மலை ரயில் சேவை மீண்டும் தொடங்கியது!

உதகை, நவ. 21 –

மேட்டுப்பாளையத்தில் இருந்து நேற்று முன்தினம் காலை உதகையை நோக்கி ரயில் புறப்பட்டது. மேட்டுப்பாளையம் – குன்னூர் இடையிலான மலை ரயில் போக்குவரத்து பத்து நாட்களுக்கு பிறகு மீண்டும் துவங்கியது. கடந்த பத்து நாட்களுக்கு மேலாக வட கிழக்கு பருவமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக மலை ரயில் பாதை அமைந்துள்ள பல்வேறு இடங்களில் மரங்கள் முறிந்தும், மண்சரிவு ஏற்பட்டும் சேதமடைந்திருந்தது.

இந்நிலையில், சேதமடைந்த ரயில் தண்டவாளங்கள் சீரமைக்கும் பணிகள் முடிவுற்ற நிலையில் பத்து நாட்களுக்கு பிறகு நேற்று முன்தினம் மேட்டுப்பாளையம் – குன்னூர் இடையிலான மலை ரயில் சேவை மீண்டும் துவங்கியது. பத்து நாட்கள் இடைவேளைக்கு பிறகு மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் இருந்து முன்பதிவு செய்த 180க்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகளுடன் மலை ரயில் புறப்பட்டு குன்னூர் சென்ற நிலையில் அதில் மிகுந்த உற்சாகத்துடன் பயணிகள் பயணித்துள்ளனர்.

---

### தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்படும்

# 10 சட்ட மசோதாக்களுக்கும் - ஆளுநர் ஒப்புதல் அளிக்கவேண்டும்!

## சட்டப்பேரவையில் - பேரவைத் தலைவர் மு.அப்பாவு வலியுறுத்தல்!

**சென்னை, நவ. 21 -**

**சட்டப்பேரவையில் 18.11.2023 அன்று, விவாதங்களின் நடுவே குறுக்கிட்டு விளக்கமளித்த பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், “தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்படும் 10 சட்ட மசோதாக்களுக்கும் மறுப்பேதும் தெரிவிக்காமல் ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளிக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.**

*சட்டப்பேரவையில் - பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், இதுகுறித்து குறிப்பிட்டதாவது:-*

இந்த அவைக்கு நானும் சில விவரங்களைச் சொல்ல வேண்டும். நம்முடைய ஆளுநர் அவர்கள் அதை “I withheld assent” என்று போட்டிருக்கிறார்கள். அப்படியென்றால், திரும்ப இந்த சட்டமன்றத்தில் விவாதிப்பதற்கோ, மறு ஆய்வு செய்வதற்கோ உரிமை இருக்கிறதா என்கின்ற கோணத்தில்தான், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்களின் கேள்வி நியாயமான கேள்விதான். அதில் ஒன்றும் தவறில்லை. ஆனால், NEET தேர்வில் நம்முடைய நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுமாதிரி, நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் இதேபோன்று “I with hold assent” என்று சொல்லி, திருப்பி அனுப்பியபோது, அப்போது நம்முடைய சட்டத் துறை அமைச்சராக இருந்த சி.வி.சண்முகம் அவர்கள், நாங்கள் அதற்கு மத்திய அரசிடம், என்ன காரணத்திற்கு withhold என்று நீங்கள் அனுப்பினீர்கள் என்ற விவரத்தைக் கேட்டிருக்கிறோம். அந்த விவரம் வந்திருந்தால் அந்த Billஐ மறு ஆய்வுக்கு நாங்கள் இந்த சட்டமன்றத்திற்கு கொண்டு வந்திருப்போம் என்று அவர்கள் சொன்னபோது, அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இன்றைய முதல்வர் அவர்கள், 2019 ஜூலை மாதம் 17 ஆம் தேதி, தெளிவாகச் சொன்னார்கள், withhold என்று சொன்னதை, Article 201 of the Indian Constitutionன்படி, மறு ஆய்வு செய்வதற்கு இந்தச் சட்டமன்றத்திற்கு உரிமை இருக்கிறது.

சட்டமன்றம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது. பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டவர் முதலமைச்சராக இருக்கின்றார். அந்த அவைக்கு முழு இறையாண்மை இருக்கின்றது, மாண்பு இருக்கின்றது, மக்கள் பிரச்சி



னையை எத்தனை முறை வேண்டுமென்றாலும் கொண்டு வரலாம் என்பதற்கு முதலமைச்சர் அவர்களும் அப்போது தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள். இந்த அவையின் அவைக்குறிப்பில் அது இருக்கிறது. இன்னும் அதற்குமேல் சொல்ல வேண்டுமென்றால், withhold என்று சொல்லி, அதை நிறுத்தி வைத்திருப்பதாக அவர் சொன்னால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மறு ஆய்வு செய்யுங்கள் என்றோ, மறு ஆய்வு செய்யக்கூடாது என்றோ எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மறு ஆய்வுக்கு உட்பட்டது, மறு ஆய்வு செய்யக்கூடாது என்றும் சொல்லவில்லை. இந்த இடத்தில் இந்தப் பேரவைக்கு மிகப் பெரிய மாண்பு இருக்கின்றது. பேரவை விதி 286ன்படி இந்திய அரசியலமைப்பு சட்டத்திலோ அல்லது பேரவை விதிகளிலோ குறிப்பிட்டு சொல்லப்படாத பொருள் குறித்து சட்டமன்றத்தில் இவ்வாறு அரசு ஒரு தனித் தீர்மானம் கொண்டு வந்தால், அந்த இடத்தில் சட்டமன்றப் பேரவைத் தலைவர் என்ற முறையில்,

அதாவது, இந்தச் சட்டமன்றப் பேரவை எனக்குத் தந்திருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்தச் சட்டப் பேரவையிலே மறு ஆய்வுக்கு சபாநாயகர் என்ற முறையில் நான் அனுமதி அளித்துத்தான் இதுவரை இந்த விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அதில் மாறுபட்ட கருத்து யாருக்கும் இல்லை. மறு ஆய்வுக்கு உட்பட்டதுதான். அது திருப்பி அனுப்பப்பட்டது எந்தக் காரணமும் இல்லாமல். உள்நோக்கத்தோடு என்றுதான் அதில் பொருள்கொள்ள வேண்டும். காரணம், கல்வியில், உயர் கல்விக்கு என்று சொல்லி ஒரு சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. அது எந்த இறையாண்மைக்கு எதிரானது? இது எந்த அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது? இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டில் இருக்கின்ற எந்தப் பல்கலைக்கழகத்திற்கும் ஒன்றிய அரசிடமிருந்து தற்போது மானியமே வழங்கப்படுவதில்லை.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு 3 ஆண்டுகளாக ஒரு பைசாகூட வழங்கப்படவில்லை. இது எல்லோருக்கும் தெரியும். நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே, இந்த நிலையிலே முழுவதுமாக நம்முடைய அரசின் முதலமைச்சர் அவர்கள், நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் நம்முடைய வரி வருவாயின் மூலம் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் அனைத்தையும் இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், 3 வருடங்களுக்குப் பிறகு மொத்தமாக அவர்கள் withhold என்று எழுதி அனுப்பியதில், உள்நோக்கம் இருப்பதாகத்தான் அனைவருமே வெளிப்படையாகச் சொல்கிறார்கள். நம்முடைய பாரதிய ஜனதா கட்சியினுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் நயினார் நாகேந்திரன் அவர்கள் சரியான பதில் இல்லாத காரணத்தால் வெளிநடப்பு செய்திருக்கிறார். நான்கூட அவர்கள் வெளிநடப்பு செய்வதைப் பார்த்தால், தமிழ்நாட்டிலே யாருமே ஆளுநருடைய செய்கைக்கு சரி என்று சொல்லவில்லை. இவர்கள் சொல்லித்தான் அவர் செயல்படுகிறாரோ என்கின்ற ஓர் அர்த்தம் வந்துவிடும், இவர் வெளிநடப்பு செய்வதாலேயே அப்படி ஒரு நோக்கம் வந்துவிடும். ஆகவே, இவருக்கு தமிழ்நாட்டின்மீது அக்கறை இருக்கிறதா என்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தனித் தீர்மானம் மறு ஆய்வுக்கு உட்பட்டது.

10 சட்டமுன்வடிவுகளையும் ஒரு fullstop, comma இல்லாமல், NEET விலக்கு மசோதா எவ்வாறு மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்பட்டதோ, online Rummy தடை மசோதா எவ்வாறு மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்பட்டதோ, அதேபோன்று இந்த 10 மசோதாக்களும் மீண்டும் அனுப்பப்படும். அவற்றிற்கு ஆளுநர் ஒப்புதல் தர வேண்டும். இதுதான் சட்டம்.

இவ்வாறு பேரவைத் தலைவர் அவர்கள், குறிப்பிட்டார்.

---

### காங்கிரஸ் கட்சியின் தேர்தல் வாக்குறுதிகளை காப்பியடிக்கிறது!

# பா.ஜ.க.வுக்கென தனித்த கொள்கை எதுவும் இல்லை!

## அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே பிரச்சாரம்!

*ஜெய்ப்பூர், நவ. 21 -*

ராஜஸ்தான் மாநிலத்தில் வரும் 25ம் தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில், பிரசாரங்கள் சூடுபிடித்துள்ளன. பிரசார பொதுக்கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பா.ஜ.க.வுக்கு என எந்த கொள்கையும் இல்லை என்றும், தேர்தலுக்காக காங்கிரஸின் வாக்குறுதிகளை காப்பியடிக்கிறது என்று விமர்சித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலத்தில் முதலமைச்சர் அசோக் கெலாட் தலைமையிலான காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கிறது. இம்மாநிலத்தில் மொத்தம் 200 தொகுதிகள் இருக்கின்றன. இந்நிலையில் மாநிலத்திற்கு வரும் 25ம் தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெறுகிறது. இதில் எப்படியாவது ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள காங்கிரஸ் பல்வேறு வியூகங்களை வகுத்துள்ளது.



எனவே காங்கிரஸ் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டு வருகிறது. பரத்பூர் மாவட்டத்தின் வயர் சட்டமன்ற தொகுதியில் தேர்தல் பிரசாரத்தில் பங்கேற்று பேசிய அக்கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பா.ஜ.க.வுக்கு என எந்த கொள்கையும் இல்லை என்றும், தேர்தலுக்காக காங்கிரஸின் தேர்தல் வாக்குறுதிகளை பா.ஜ.க. காப்பியடிக்கிறது என்றும் விமர்சித்துள்ளார்.

---

### மீன்பிடி விசைப்படகுகளுக்கு வழங்கப்படும்

# டீசல்அளவு 19,000 லிட்டராக உயர்வு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, நவ. 21-*

தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு பால்வளம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கை: மீன்பிடி விசைப்படகுகளுக்கு வழங்கப்படும் வரிவிலக்களிக்கப்பட்ட அதிவேக டீசல் எரியெண்ணெய் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து உயர்ந்து வரும் டீசல் எரியெண்ணெய் விலையினால் மீன்பிடி தொழில் லாபகரமானதாக இல்லை என்பதால், மீனவர்களின் வாழ்வாதாரமான மீன்பிடி தொழிலை தொடர்ந்திடும் வகையில், தற்போது வழங்கப்பட்டு வரும் மானிய டீசல் எரியெண்ணெய் அளவினை உயர்த்தி வழங்க அரசுக்கு பல்வேறு மீனவ சங்கங்கள் கோரிக்கைகள் அளித்துள்ளன.

அவர்களின் கோரிக்கையினை ஏற்று, 18.8.2023 அன்று ராமநாதபுரத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மீன்பிடி விசைப்படகுகளுக்கு வழங்கப்படும், விற்பனை வரி விலக்களிக் கப்பட்ட அதிவேக டீசல் எரியெண்ணெய் அளவினை, படகு ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு 18,000 லிட்டரில் இருந்து 19,000 லிட்டர் வீதமும், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகளுக்கு படகு ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு 4,000 லிட்டரில் இருந்து 4,400 லிட்டர் வீதமும் உயர்த்த வழங்க அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அந்த அறிவிப்பினை 2024-2025ம் ஆண்டு முதல் செயல்படுத்தும் விதமாக அரசாணை வெளியிட்டுள்ளது. இதன்மூலம் 4,500 விசைப்படகு மீனவர்களும் 13,200 நாட்டுப் படகு மீனவர்களும் பயன்பெறுவார்கள்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 21-11-2023

# ஆளுநரின் தொங்கு சதை அ.தி.மு.க.

எந்தக் காரணமும் சொல்லாமல் இரண்டாண்டு காலம் தமிழ்நாட்டுச் சட்ட முன்வடிவுகளை கிண்டி மாளிகைக்குள் வைத்து பூட்டி வைத்திருந்த ஆளுநர் ஆர்.என்.ரவி, உச்சநீதிமன்றம் உச்சம் தலையில் கொட்டத் தொடங்கியதும் - எந்தக் காரணமும் இல்லாமல் திருப்பி அனுப்பி இருந்தார். அது கிடைத்த மூன்றாவது நாளே தமிழ்நாடு சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி - அதே சட்ட முன்வடிவுகளை திருத்தம் ஏதுவும் செய்யாமல் நிறைவேற்றி அனுப்பிவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

“கோடிக்கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும் நம்மை - இந்திய அரசியல் சட்டம் வழங்கிய அதிகாரத்தின் மையமாக இருந்து சட்டமியற்றும் இந்த சட்டமன்றத்தை - தடுக்கும் சக்தி ஒன்று முளைக்குமானால் - இந்தச் சூழ்நிலை என்பது இந்திய ஜனநாயகத்தை மிக மோசமான வகையில் கொண்டு செலுத்திவிடும் என்ற அச்சத்துடன்தான் உங்கள் முன்னால் நிற்கிறேன்” என்று தொடங்கிய முதலமைச்சர் அவர்கள், “நாம் எப்போதும் சட்டத்தின் வழி நடப்பவர்கள். எனவே, அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 200-ன்படி அவர் எந்தக் காரணமும் குறிப்பிடாமல் திருப்பி அனுப்பி வைத்துள்ள 10 சட்டமுன்வடிவுகளையும் நிறைவேற்றித் தருமாறு நூற்றாண்டு கண்ட இச்சிறப்புமிக்க சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களை தங்கள் வாயிலாகக்கேட்டுக் கொள்கிறேன்” என்று முடித்தார் முதலமைச்சர் அவர்கள்.

**வாக்கெடுப்பின் போது இருந்த அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு முதலமைச்சரின் தனித்தீர்மானமும், அமைச்சர்கள் முன்மொழிந்த சட்டமுன்வடிவுகளும் பேரவையில் அனைத்து உறுப்பினர்கள் ஆதரவுடன் முழுமையாக நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றில் நவம்பர் 18 - 2023 என்பது மிகமிக முக்கியமான நாளாகும். அரசியலமைப்புச் சட்டத்தைக் காக்கவும் - மக்களாட்சி மாண்பைக் காக்கவும் - மாநில சுயாட்சித் தத்துவத்தை மீட்டெடுக்கவும் - ஆளுநர்களின் வாலை நறுக்கவும் அந்த நாள் முக்கியமான நாளாக அமைந்துவிட்டது.**

வழக்கம்போல்பா.ஜ.க.-வெளிநடப்புசெய்தது. இதுஎதிர்பார்த்ததுதான். ஏனென்றால் ஆட்டுவிப்பவர்கள் அவர்களே. பா.ஜ.க. தலைமை சொல்லாமல் ஆளுநர் ஆர்.என்.ரவி இவ்வளவு ஆடமாட்டார்.

பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க.வும் வெளிநடப்பு செய்துவிட்டது. இதுவும் ஆச்சர்யம் அளிக்கவில்லை. ஆட்டுவிப்பது பா.ஜ.க. என்றால், ஆட்டம் போடுவது ஆளுநர் மட்டுமல்ல, அ.தி.மு.க.வும்தான் என்பதை பழனிசாமி நிரூபித்துவிட்டார்.

**முதலமைச்சர் கொண்டு வந்த சிறப்பு தனித்தீர்மானத்தின் மீது அ.தி.மு.க. சார்பில் பேசியவர் பழனிசாமி. அப்போது ஆளுநரை விமர்சித்தே பேசவில்லை. தீர்மானம் கொண்டு வந்த தி.மு.க. அரசைக் கண்டித்துதான் பேசிக் கொண்டு இருந்தார். இதுவே அவரது உண்மையான உள்நோக்கம் என்ன என்பதைக் காட்டி விடும்.**

**“சென்னாரெட்டி காலத்தில் இருந்து ஆளுநர்கள் இப்படித்தான் நடந்து கொள்கிறார்கள்” என்று பழனிசாமி பேசி இருந்தால் அவரை ஜெயலலிதா வழியில் நடப்பவராக ஏற்றுக் கொள்ளலாம். ‘மாநில அரசுகளை ஆளுநர்கள் இப்படித்தான் மறைமுகமாக ஆட்சி செலுத்தப் பார்க்கிறார்கள்’ என்று சொல்லி இருந்தால் அவரது கட்சிக்கு ‘அண்ணா’ என்ற பெயர் இருப்பதற்கு பொருத்தமாகப் பேசுகிறார் என்று மகிழ்ச்சி அடையலாம். இவை அனைத்தையும் விட்டுவிட்டு அதே கிண்டி மண்டப ஸ்கிரிப்டை எடுத்து வாசித்துக் கொண்டிருக்கிறார் பழனிசாமி. இதை விட மோசடித்தனமான நிலைப்பாடு இருக்க முடியாது.**

‘நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும் போது தனித்தீர்மானம் எதற்கு?’ என்று சட்டமேதை பழனிசாமி கேட்கிறார். ‘அவர் தான் மூச்சு விடுகிறாரே, பிறகு எதற்கு ஆபரேஷன்?’ என்று கேட்பதைப் போல இருக்கிறது பழனிசாமியின் வாதம்.

‘சட்டமுன்வடிவுகளை திருப்பி அனுப்பாமல் வைத்திருக்கிறார்’ என்று வழக்குப் போட்டதும், உடனே திருப்பி அனுப்புகிறார் ரவி. அதாவது திருப்பி அனுப்பிவிட்டு தப்பிக்கப் பார்க்கிறார் ரவி. இதனைத்தான் சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டம், நாட்டுக்கு அம்பலப்படுத்தி இருக்கிறது. ‘வழக்குப் போட்டதும் தான் திருப்பி அனுப்புவீர்களா?’ என்று ஆளுநரைக் கேட்பதற்கு பழனிசாமிக்கு துப்பு இல்லை. தீர்மானம் போட்டவர்களைப் பார்த்து பிராண்டுகிறார்.

வெளிநடப்புச் செய்வதற்கு பழனிசாமி கண்டுபிடித்த காரணம் தான் அதை விட மோசடியானது. பல்கலைக் கழகத்துக்கு ஜெயலலிதா பெயரை வைத்தோம், அதை நீக்கிவிட்டது தி.மு.க. அரசு என்கிறார் அவர். சட்டமன்றத்தில் பேசும் போதாவது தெரிந்து கொண்டு வர வேண்டாமா? ‘திராவிடம் என்றால் என்ன?’ என்று தெருவில் நிறுத்திக் கேட்டார்கள். ‘நான் புராணங்களை படித்தது இல்லை’ என்றார். அது தெரு. எதுவேண்டுமானாலும் சொல்லலாம். பேரவையில் பேசும் போது அறிந்து வர வேண்டாமா?

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நாம் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் வழங்காமல் இருந்தார் மாண்புமிகு ஆளுநர் அவர்கள். “I withhold assent” அதாவது, - தான் அனுமதியை நிறுத்திவைத்துள்ளதாகக் குறிப்பிட்டு, கடந்த 13.11.2023 அன்று திருப்பி அனுப்பி வைத்திருக்கின்றார். இதில் இரண்டு சட்டமுன்வடிவுகள் அ.தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்டவை ஆகும்.

★. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்ட முன்வடிவு (ச.மு.எண்.02/2020) -

★ 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவஅறிவியல் பல்கலைக் கழகம் (திருத்தச்) சட்டமுன்வடிவு (ச.மு.எண்.12/2020) இவை இரண்டும் அ.தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டு ஆளுநர் மாளிகை ஒப்புதல் வழங்காதவை ஆகும்.

10 சட்டமுன்வடிவுகளில், 2 சட்ட முன்வடிவுகள் 2020ஆம் ஆண்டிலிருந்து 3 ஆண்டுகளுக்கும் மேலாக ஆளுநர் அவர்கள் தன்வசம் வைத்துக் கொண்டுவிட்டு, தற்போது ஒப்புதல் எதுவும் அளிக்காமல் திருப்பி அனுப்பியுள்ளார். இதுவே பழனிசாமிக்குத் தெரியவில்லை. ஆளுநருக்கு எதிராகப் பேசினால், பா.ஜ.க. கோபித்துக் கொள்ளும் என்று பாதம் தாங்கி பழனிசாமி பயந்துவிட்டார். அதனால்தான் தீர்மானம் கொண்டு வந்த தி.மு.க.வையே விமர்சித்துப் பேசிக் கொண்டு இருந்தார்.

மீன்வளப் பல்கலைக் கழகத்துக்கு ஜெயலலிதா பெயர் வைக்கவும் ஆளுநர் ஒப்புதல் அளிக்கவில்லை. ஆளுநர் திருப்பி அனுப்பிய பத்து சட்டமுன்வடிவுகளில் அதுவும் ஒன்று. அதுவே பழனிசாமிக்குத் தெரியவில்லை. பழனிசாமி கண்ணை பா.ஜ.க. பயம் மறைப்பதால் தெரியவில்லை.

**ஆளுநருக்கு பழனிசாமி சேவகம் செய்வதற்கு மிக முக்கியமான காரணம், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல் வழக்குகளுக்கு அனுமதி தராமல் வைத்திருக்கிறார் ‘மகா யோக்கியர்’ ஆர்.என். ரவி. அதனால்தான் ஆளுநரின் பாதத்தையும் சேர்த்துத் தாங்குகிறார் பழனிசாமி.**

தமிழ்நாட்டில்

# உயர் கல்வி மாபெரும் வளர்ச்சி பெற்றது - கலைஞர் ஆட்சியில்தான்!

## சட்டப் பேரவையில் - உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆணித்தரமான விளக்கம்!

சென்னை, நவ. 21- சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தின் போது குறுக்கிட்டு விளக்கமளித்த உயர்கல்வித்துறை அமைச்சர்முனைவர்க.பொன்முடி, “தமிழ்நாட்டில் உயர்கல்வி மாபெரும் வளர்ச்சி பெற்றது. தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் தான்”என்றுஆணித்தரமாக எடுத்துரைத்தார்.



சட்டப் பேரவையில் - அமைச்சர் முனைவர் க.பொன்முடி குறிப்பிட்டதாவது:-

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவெனில், நீங்கள் ஆட்சியிலே இருந்தபோது சூரப்பா அவர்களை கொண்டுவருவதைஎதிர்த்து சொன்னீர்கள். அப்போது நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தாலும்நாங்களும்உங்களுடைய கோரிக்கையை ஏற்றுஆதரவளித்து,சூரப்பாவின்மீது வழக்கு போடுவதற்குநாங்களும்உறுதுணையாக இருந்தோம் என்பதையும்நீங்கள்மறந்துவிடக் கூடாது.அந்தசூரப்பாவினுடையவழக்குநீங்கள்போட்டதைப் போலவே இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.ஆகவே, எந்த நல்ல நிகழ்வுகளாக யிருந்தாலும்,காலத்திற்கேற்ப அப்போதிருந்த ஆளுநர்கள் எப்படிசெயல்பட்டார்கள்; இப்போதிருக்கிற ஆளுநர் அவர்கள் எப்படி செயல் படுகிறார்என்பதுஉங்களுக்குத் தெரியாதது அல்ல; இப்போதிருக்கிற ஆளுநர் அவர்கள்மிக அதிகமாகபல் கலைக்கழகங்களினுடைய விவகாரங்களிலேதலையிட்டுக் கொண்டிருக்கிற காரணத்தினாலேதான், தமிழக முதலமைச்சர் அவர்கள் இதற்காக ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குசுட்டிக்காட்ட விரும்புகிறேன். கட்சிவேறுபாடுகள் இல்லாமல் இதை அனைவரும் நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால், அரசமைப்புச் சட்டத்திலே சொல்லப்பட்டி ருக்கிறது; தமிழ்நாடுஅரசுக்குஇந்தஉரிமைகளெல்லாம் இருக்கின்றன. குறிப்பாக, இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 246ன்கீழ், ஏழாவது அட்டவணை,பட்டியல்IIமாநிலப் பட்டியல், வரிசை 32ன்படி, மாநில அரசு பல்கலைக்கழகத்தை நிறுவுதல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் களைத்தல் ஆகியவை மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டது. அதைத்தான் நிறுவ வேண்டும் என்ற எண்ணத்தோடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுவும்இன்றையஆளுநர் அவர்களுடைய செயல்பாடுகளையெல்லாம் இங்கேநண்பர்களெல்லாம் சுட்டிக்காட்டி னார்கள். திரு. சங்கரய்யா அவர்களுக்கு முனைவர் பட்டம் கொடுக்க வேண்டும் என்று செனட்நிறைவேற்றிஅனுப்பிய பிறகும், ஆளுநர் அவர்கள் மறுத்ததிலிருந்து உங்களுக்கு அவர் என்னென்ன செய்து கொண்டிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். பல்கலைக்கழகங்களில் அரசியல் செய்து கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது; அது போன்று இருக்கக் கூடாது என்ற காரணத்தினால்தான் இந்தத்தீர்மானம்கொண்டு வரப்பட்டுள்ளது. நம்மை அரசியல் செய்கிறோம் என்று சொல்கிறார்கள்; அதெல்லாம் கிடையாது. அவை முன்னவர் அவர்கள் இங்கே சொன்னதைப் போல, அப்போதிருந்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் 3 பேர்இருக்கிறகுழுதான் துணை வேந்தரை தேர்ந்தெடுத்து அவர்களுக்குஅனுப்பும். அதில்ஒருவரைத்தான்நியமிப்பார்கள் என்பதெல்லாம் இருந்தது. நீங்கள்சொன்னீர்கள், இந்த ஆளுநர் அவர்கள், அந்த 3 பேர், அவர்கள் நியமிப்பது மட்டுமல்லாமல், UGC லிருந்து வருகிற ஒருவரையும் நியமிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அதையெல்லாம்தான் நாம் எதிர்க்கிறோம். UGCஎன்பது ஒரு advisory body; அவ்வளவுதானே தவிர, அவர்கள் சொல்பவர்களை நியமிக்க வேண்டும் என்பது அல்ல; பல்கலைக்கழகங்களுடைய சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் தமிழக முதலமைச்சர்அவர்கள்இதைவலியுறுத்திசொல்லியிருக்கிறார்கள். நீங்கள் இருந்தபோதிலும் சரி, இப்போதும் சரி, உண்மையிலேயே இது தமிழகத்தினுடைய உயர் கல்வித் துறையின் வளர்ச்சிக்குஏதுவாகஇருக்கும்என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

உயர்கல்வி என்று சொன்னால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கலைஞர் ஆட்சியில்தான் அதிகமான வளர்ந்திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் இங்கே சட்டப் பல்கலைக்கழகம் தனியாக உருவாக்கப்பட்டது.

விவசாயப்பல்கலைக்கழகம் தனியாக உருவாக்கப்பட்டது. ஆகவே, பல்வேறு பல்கலைக்கழகங்களை உருவாக்கியவர் கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல,மாவட்டத்திற்குஒருமருத்துவக்கல்லூரி கொடுக்க வேண்டுமென்று சொன்னவரே தலைவர் கலைஞர்தான். அந்த அடிப்படையில்அவர்இருக்கின்ற போதே பல்வேறு மாவட்டங்களுக்கு மருத்துவக் கல்லூரி வழங்கப்பட்டது. அதற்குப் பிறகுதான் இன்றைக்கு மத்திய அரசுகூட இங்கேகொண்டுவரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே,கலைஞருடைய ஆட்சியில் உயர் கல்வி என்பதுவளர்ந்தது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய காலத்தில் ஆரம்பக் கல்வி வளர்ந்தது; தலைவர் கலைஞருடைய காலத்தில் உயர் கல்வி வளர்ந்தது. அதனால்தான்தமிழகமுதல்வர் அவர்கள் என்னுடைய இரண்டு கண்களிலே ஒன்று கல்வி என்று சொல்லி, இன்றும் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்டு கொண்டிருக்கிறார்என்பதுதான்உண்மை. அவர்களும் செய்தார்கள்; நான்இல்லையென்றுசொல்லவில்லை. அதே நேரத்தில் கலைஞர் அவர்கள் செய்ததையும் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான்இதனைநான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் தொடங்கப்பட்ட பல்கலைக்கழகத்தைப்பற்றி சொன்னார். அதற்கு ஏதாவது இங்கே நிதியை ஒதுக்கியிருந்தார்களா என்பதை மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்களை சொல்ல சொல்லுங்கள். (குறுக்கீடு) நிதியும் ஒதுக்கப்படவில்லை;இடமும்தேர்ந்தெடுக்கப்படவில்லை. பெயர் வைப்பதற்காக மட்டுமே ஒன்றை அறிவித்துவிட்டுசென்றார்களேதவிர, உண்மையிலேயேஅவர்கள் பல்கலைக்கழகத்தை உருவாக்கவில்லை. அந்த அடிப்படையில்தான் அவர்கள் காலத்தில்அரசுடைமையாக்கப்பட்டஅண்ணாமலைபல்கலைக்கழகத்தோடு அவை இணைக்கப்பட்டு, இன்றும் அவை சிறப்பாகச் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.) (ஓ. பன்னீர்செல்வம், பால் மனோஜ் பாண்டியன், ஆர். வைத்திலிங்கம், கோ. ஐயப்பன் தவிர)

தலைவர் கலைஞர் பெயரையேமாற்றிவைத்தார்கள் அவர்கள். கலைஞர்கல்லூரி என்றுதிருவாரூர்மாவட்டத்தில் இருந்த கல்லூரியின் பெயரையேமாற்றியவர்கள் இவர்கள். இவர்கள் இப்படிப் பேசுவதற்கு எந்தவிதமான தகுதியும் இல்லை. திருவாரூரில் கலைஞர் கொண்டுவந்த கல்லூரிக்கு, கலைஞர் அரசு கலைக் கல்லூரி என்று இருந்ததை மாற்றியவர்கள் அவர்கள் என விளக்கம் அளித்தார்.

# தமிழ்நாட்டில் மழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, நவ.21- தமிழ்நாட்டில் 9 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென் மேற்கு வங்கக்கடல் மற்றும் இலங்கை பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்யவாய்ப்புள்ளது. கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள் தமிழக மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் 9 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ராமநாதபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சட்டமன்ற சிறப்புக் கூட்டம் : ஒரே கல்லில் பல மாங்காய்!

**ஒரு நாள் சிறப்பு சட்டமன்றக் கூட்டம்!**

**ஒரே கல்லில் பல மாங்காய்... என்பார்களே, அதனை அடித்துக் காட்டியுள்ளார் முதல்வர் தளபதி ஸ்டாலின்!**

**இந்தக் கூட்டத்தின் மூலம் ஆளுநரின் அகம்பாவம் தோலுரிக்கப்பட்டுள்ளது! பி.ஜே.பி.யின் சுயரூபம் வெளிக் கொணரப்பட்டது!**

**அ.தி.மு.க.வின், பி.ஜே.பி. எதிர்ப்பு நாடக முகமூடி கிழிக்கப்பட்டுள்ளது !**

**தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வகுத்த வியூகத்திலிருந்து வெளிவர முடியாமல், இவர்கள் எல்லோரும் விழிபிதுங்கி நிற்கும் காட்சி வரலாறாகிறது!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.11.2023 அன்று சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் அனுமதி வழங்கப்படாமல் திருப்பி அனுப்பப்பெற்ற சட்டமுன்வடிவுகளை மீண்டும் சட்டப்பேரவையில் மறுஆய்வு செய்து நிறைவேற்றிடும் அரசினர் தனித்தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

உச்சநீதிமன்றத்தின் கண்டனம் தன்மீது பாயுமோ என்ற அச்சத்தில் அதைத் தவிர்க்க தான் சாதுர்யமாகச் செயல்படுவதாகக் கருதி, சில ஆண்டுகளாக; கிடப்பில் கிடந்த மசோதாக்களைத் திருப்பி அனுப்பினார் ஆளுநர் ரவி!

பாவம்; அவர் எதிர்பார்த்திருக்க மாட்டார் ; இந்த எதிர் விளைவை! **“நினைத்தது ஒன்று; நடந்தது ஒன்று, அதனாலே முழிக்குதே அம்மா கண்ணு!”** என்ற பாடல் வரிகளை மாற்றி, **“நினைத்தது ஒன்று; நடந்தது ஒன்று, அதனாலே முழிக்குதே ஆளுநர் கண்ணு!”** என்று பாடிடும் வகையில் எல்லாமே நடந்துவிட்டது!

நாளை உச்சநீதிமன்றத்துக்குச் சென்று தன்னிடம் தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய தீர்மானங்கள் எதுவும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கும் நோக்கோடு ஆளுநர் ரவி திருப்பி அனுப்பினார். அவர் எதிர்பார்த்திருக்க மாட்டார்; இப்படி தமிழ்நாடு அரசு உடனடியாக சட்டப் பேரவைக் கூட்டத்தைக் கூட்டி, அவரால் திருப்பி அனுப்பப்பட்ட மசோதாக்களை மீண்டும் ஆளுநருக்கே திருப்பி அனுப்பிடும் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றி அனுப்பி வைக்கும் என்பதை!

ஆளுநர் ரவியின் சித்து விளையாட்டுகளெல்லாம் தமிழ்நாட்டு அரசியல் அரங்கில் செல்லுபடியாகாது என்பதை; பல படிப்பினைகளைப் பெற்றும் ஏனோ அவர் உணரவில்லை!

தமிழ்நாடு அரசு தயாரித்துத் தந்த ஆளுநர் உரையில் தமிழினத் தலைவர்களின் பெயர்களையும், சில சொற்களையும் அவரே விடுத்து உரையாற்றிவிட்டு, தான் பெரிய சாதனையைப் புரிந்து விட்டதாகவும், ஆளும் கட்சி என்ன செய்துவிட முடியும் என்றும் இறுமாப்பில் இருந்தபோது, தமிழ்நாட்டு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவையில் எழுந்து, **“ஆளுநர் உரையில் அரசு தயாரித்துத் தந்த உரைதான் அவைக் குறிப்பில் இடம் பெறும்”** எனத்தீர்மானம்நிறைவேற்றியதும், அவையிலிருந்து தேசியகீதம் ஒலிப்பதற்கு முன்பே ஆளுநர் ஓட்டமும் நடையுமாக வெளியேறியபோதே பாடம் பெற்றிருப்பார் என்று கருதினோம்!

சனாதன தர்மத்துக்கு சப்பைக் கட்டு கட்டிடும் ஆளுநர், பிறப்பால் தான் தலையில் பிறந்த சாதியைச் சேர்ந்தவர், தன்னை வெற்றி காண இயலாது என்ற இறுமாப்பில் சுழன்ற போது; தமிழ்நாட்டு முதலமைச்சர் அவரது தலையிலே இறக்கிய முதல் இடியிலேயே அவர் தெளிவு பெற்றிருப்பார் - பெற்றிடுவார் என எண்ணினோம்! முதல் சூட்டிலே அவர் திருந்தியதாகத் தெரியவில்லை!

அமைச்சர் செந்தில் பாலாஜியின் மீது வழக்கு இருப்பதால் அவரை அமைச்சர் பொறுப்பிலிருந்து நீக்க வேண்டும் எனத் தான்தோன்றித்தனமாக, ஒரு ஆளுநரின் அதிகார வரம்பு அறியாது தெரிவித்துவிட்டு, முதல் அமைச்சரின் விளக்கப் பதிலுக்குப் பிறகு நத்தை தனது கூட்டுக்குள் பதுங்குவதுபோல பதுங்கிக் கொண்டார்!

“எல்லோருக்கும் எல்லாம்” எனும் ‘திராவிட மாடல்’ ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் முதல்வரை முடக்குவதாக எண்ணி, ‘இங்கு உண்மையில் ஆரியம் -



திராவிடம் கிடையாது’ - என்று பேசிவிட்டு, எதிர்ப்பு வலுவானதும்; நண்டு ஓடிப் பொந்துக்குள் புகுந்துகொள்வது போல ராஜ்பவனத்துக்குள் முடங்கிப் போனார்!

‘தமிழ்நாடு’ என்பதை ‘தமிழகம்’ எனக் குறிப்பிட்டால் போதும் என்று பேசியதோடு மட்டுமின்றி, தனது ஆளுநர் அலுவலகத்தில் அதற்கான மாற்றங்களைச் செய்து, விழா அழைப்பில், “தமிழ்நாடு அரசு” என்ற பெயரை தன்னிச்சையாக தமிழகமாக மாற்றி, சிறு பிள்ளைத்தன விளையாட்டு என்பார்களே; அந்த முறையில் செயல்பட்டார்! ஒட்டு மொத்தத் தமிழ்மக்களின் உணர்வுக்கு எதிராக அவர் செயல்பட்டதால், தமிழ்நாட்டின் பல திக்குகளிலிருந்தும் எழுந்த எதிர்ப்பில், சுழற்காற்றில் சிக்கிய சருகாய் அல்லாடிப் போனார்!

**இத்தனைக்குப் பிறகும் அவர் தன்னையும், தனது போக்கையும் திருத்திக் கொண்டதாகத் தெரியவில்லை! தன்னை மேதையாகத் தனக்குத் தானே எண்ணிக் கொண்டு, ஆணவத்தின் உச்சாணிக் கொம்பில் உட்கார்ந்து கொண்டு அடி மரத்தை வெட்டிடும் செயலில் இறங்கி அவ்வப்போது தலைகுப்புற கீழே விழுந்தாலும், மீண்டும் எழுந்து மரத்தில் ஏறிக் கொண்டு அதே செயலில் ஈடுபடும் பைத்தியக் காரச் செயலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்!**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஜனநாயக அரசுக்கு எதிராக நியமனப் பதவியில் இருந்துகொண்டு, சர்வாதிகாரப் போக்கோடு, இணையான அரசாங்கம் (Parallel Govt.) நடத்தத் தொடங்கினார்!

சட்டமன்றத்தில் அரசியல் கட்சிகள் அனைத்தும் (பா.ஜ.க. தவிர) எடுத்த முடிவினை ஒட்டி நிறைவேற்றப்பட்ட மசோதாக்களைக் கிடப்பிலே போட்டது மட்டுமின்றி, ‘பல நாட்கள் கிடப்பில் போட்டால் அந்த மசோதாக்களை ஏற்க இயலாது என்றுதான் அர்த்தம்’ என்று இறுமாப்பு விளக்கங்களைத் தந்தார்!

**“காலவரையின்றி மசோதாக்களைக் கிடப்பில் போடுவது மிகவும் கவலைக்குரியது”** என்று உச்சநீதி மன்றம்,ஆளுநரின்செயல்பாடுகளுக்கு எதிராக தமிழ் நாடு அரசு உச்சநீதி மன்றத்தில் தொடுத்த வழக்கில் கருத்துத் தெரிவித்ததை ஒட்டி, ஆண்டுக்கணக்கில் நிலுவையில் வைத்திருந்த; அரசு நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்களில், 10 மசோதாக்களை திருப்பி அனுப்பியுள்ளார்!

தமிழ்நாடு அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கினை சாதுர்யமாக எதிர்கொள்வதாக அவர் நினைத்து அனுப்பினார்; தான் பெரிய வியூகம் அமைத்து தன் செயலைத் தற்காத்துக் கொண்டதாக நினைத்தார் ஆளுநர்; அந்த வியூகத்தை, சிறப்பு சட்டமன்றக் கூட்டம் நடத்தி தீர்மானம் நிறைவேற்றி, திருப்பி அனுப்பப்பட்ட மசோதாக்களை ஆளுநருக்கு மீண்டும் உடனடியாக அனுப்பிவிட்டார் முதலமைச்சர்! இந்த சிறப்புக் கூட்டம் ஆளுநரை மட்டுமின்றி பா.ஜ.க., அ.தி.மு.க.வின் முகமூடிகளையும் கிழித்தெறிவதாக அமைந்து விட்டது!




எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பேசுகையில், ஒரு அரிய கண்டுபிடிப்பை வெளியிட்டார். அதாவது, “ஆளுநர் மசோதாக்களை நிறுத்தித்தான் வைத்துள்ளார்; ரத்து செய்ததாகக் குறிப்பிடவில்லை” என ‘With Hold’ என்ற வார்த்தையைக் குறிப்பிட்டு தனது ஆங்கிலப் புலமையைக் காட்டிக் கொண்டார்! “ஆளுநர் ‘With Hold’ என்று குறிப்பிட்டுள்ளதால், இந்த 10 சட்ட முன் வடிவுகளை நிராகரிக்கவில்லை” என்று குறிப்பிட்டார்!

**ஆளுநர் ‘With Hold’ - என்று குறிப்பிட்டு அந்த சட்ட முன் வடிவுகளைத் திருப்பி அனுப்பாமல், ஒரு கடிதம்மூலம் தெரிவித்திருந்தால் கூட எடப்பாடி பழனிச்சாமியின் வாதம் ஏற்கக் கூடியதாக இருக்கலாம்; சட்ட முன் வடிவுகளைத் திருப்பி அனுப்பி விட்ட பிறகு எப்படி அந்த வாதம் பொருந்தும்? சராசரி அறிவு படைத்தவர்களுக்குப் புரியக் கூடிய விவகாரம், நான்கு ஆண்டுகள் முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிச் சாமிக்குப் புரியாமல் போனது விந்தையல்லவா?**

பொதுவாக ஆளுநர், குடியரசுத் தலைவர் போன்றோர் மசோதாவைத் திருப்பி அனுப்பும் போது ‘With Hold’ என்று குறிப்பிடுவது, நிராகரிப்பதாகவே அர்த்தம் - என்பதை ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டி சட்டமன்றத்தில் பேசிய நிதியமைச்சரும் சட்ட அமைச்சரும் விளக்கமளித்தனர். இந்த விளக்கங்களை தனது கவனத்தில் கொள்ளாது, இல்லாத ஒரு குற்றச்சாட்டைக் கூறிவிட்டு, எதிர்க்கட்சித் தலைவர் தனது கட்சியினருடன் வெளிநடப்புச் செய்தார்! ஆளுநர் திருப்பி அனுப்பிய மசோதாக்களில் ஒன்று, முன்னாள் முதலமைச்சர் செல்வி.ஜெயலலிதாவின் பெயரை தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகத்துக்கு வைக்க வேண்டும் என்றிருந்ததைக் கூட அறியாமல், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியது போல; ஒரு நொண்டிச் சாக்கைக் கூறி வெளிநடப்புச் செய்தது அ.தி.மு.க.!



அ.தி.மு.க. வெளிநடப்பு செய்த காரணத்தை மிகவும் அழகாகச் சுட்டிக் காட்டிய அவை முன்னவர் அமைச்சர் துரைமுருகன், ‘பூனைக் குட்டி வெளியே வந்துவிட்டது’ என்றார்!

“பா.ஜ.க., அ.தி.மு.க. கூட்டணி முறிவு என்பதெல்லாம் வெளிநாடகம்; பி.ஜே.பி.யிலிருந்து தாங்கள் வெளியே வந்துவிட்டதாகக் கூறினாலும் அவர்களுக்கு இடையே உள்ளூர ஒரு நீரோட்டம் உள்ளது என்பதால், ஆளுநருக்கு எதிராகப் பேசினால் அது மோடியைத் தாக்குவதாக அமைந்துவிடும் என்று பயந்து வெளிநடப்புச் செய்துவிட்டனர்” என்று குறிப்பிட்டு அ.தி.மு.க.வின் சுயரூபத்தைச் சுட்டிக் காட்டினார்!

**தமிழ்நாடு சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டம் ஒரு நாள் நடத்தி, ஒரே கூட்டத்தில் பலரது சுயரூபங்களை தோலுரித்துக் காட்டிவிட்டார் முதலமைச்சர்!**

**இப்போது ஆளுநருக்கு ‘தி.மு.கழகம்’ என்பது என்ன என்று தெளிவாகப் புரிந்திருக்கும் என்று எண்ணுகிறோம்!**

**ஆணவம், அகம்பாவம் இவற்றைச் சுருட்டி வைத்துவிட்டு, தனது அதிகார வரம்புக்கு உட்பட்டுச் செயல்படுவது ஆளுநருக்கு நல்லது!.**



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் நேற்று முன்தினம் (19.11.2023) நடைபெற்ற விழாநிகழ்வில் ரூ.10கோடி மதிப்பில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவுக்கான புதிய கட்டிடம் கட்டுமானப் பணிக்கான அடிக்கல் நாட்டி மருங்காபுரி வட்டம் கொடும்பபட்டியில் ரூ.30லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள அரசு ஆரம்ப துணை சுகாதார நிலையத்தையும் திறந்து வைத்து கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்துப் பெட்டகத்தை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப்குமார், , கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி.ஜோதிமணி மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் அப்துல்சமது, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### விவசாயிகள் பயன்பெறும் வகையில்

# தமிழ்நாட்டிலேயே பெரம்பலூர் மாவட்டத்தில்தான் அதிக விழுக்காடு பயிர்க்கடன்!

## கூட்டுறவு வார விழாவில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெருமிதம்!

பெரம்பலூர் , நவ. 21 -

பெரம்பலூர் மாவட்ட கூட்டுறவுத் துறையின் சார்பில் கர்ணம் சுப்ரமணியம் சகுந்தலா திருமண மண்டபத்தில் நடைபெற்ற 70வது அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் 68 பயனாளிகளுக்கு ரூ.4.30 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு கடன் உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் க.கற்பகம் தலைமையில் வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்வில் அமைச்சர் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து மக்களுக்கான பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அரசு நகர பேருந்துகளில் கட்டணம் இல்லாபயணதிட்டத்தினை அறிவித்து இதுவரை இத்திட்டத்தின் கீழ் 375 கோடி பயணங்கள் பெண்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு சராசரியாக 40 லட்சம் பெண்கள் இத்திட்டத்தின் கீழ் பயணம் செய்து தங்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி வருகிறார்கள்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுப்படாத ஒப்பற்ற திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். கிராமப் புறங்களில் வசித்து வரும் விவசாய பெருமக்கள் காலையிலேயே வேலைக்கு சென்று விடுவதால் அவர்களது குழந்தைகள் காலை உணவை சரிவர சாப்பிட முடியவில்லை என்பதை அறிந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், காலை உணவு திட்டத்தினை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இந்த திட்டத்தின் மூலம் மாணவர்கள் சத்து மிக்க காலை உணவை சாப்பிட்டு கல்வியை பெறுகிறார்கள். இந்தத் திட்டத்திற்காக வழங்கப்படும் பொருட்கள் கூட்டுறவுத் துறை மூலம் விநியோகிக்கப்படுவதால் இத்திட்டம் கூட்டுறவுத் துறைக்கும் பயனுள்ளதாக இருக்கிறது.

தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின் படி பெரம்பலூர் மாவட்டத்தில் வட்டியில்லாப் பயிர்க்கடன் நவம்பர் 15 ஆம் தேதி முடிய ரூ.245.08 கோடி 29,524 விவ சாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக நடப்பாண்டில் அக்டோபர் 2023 முடிய 41,405 விவசாயி களுக்கு ரூ.30.22 கோடி மதிப்புள்ள 12975.366 டன் உர விற்பனை செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள், பொது மக்கள் பயன்பெறும் வகையில் பயிர் கடன், டாம்கோ, டாப்செட்கோ கடன் உள்ளிட்ட பல்வேறு கடன்கள் வழங்கியதில் பெரம்பலூர் மாவட்டம் தமிழகத்திலேயே முதலிடத்தில் உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடி அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக சுய உதவிக்குழுக்களின் 25,971 உறுப்பினர்களின் ரூ.52.72 கோடி அளவிலான சுய உதவிக்குழுக்கடன் தள்ளுபடி செய்யப்பட உள்ளது.

விவசாயிகள் தாங்கள் பெற்ற கடன் மூலம் பொருளாதாரத்தில் வலுவடைந்து கடனைச் செலுத்த ஏதுவாக மத்திய காலக் கடன்கள் 552 நபர்களுக்கு ரூ.4.24 கோடி வழங்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் நகைக்கடன் நவம்பர் 15 ஆம் தேதி முடிய 18,884 நபர்களுக்கு ரூ.117.74 கோடி வழங்கப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு நடப்பாண்டில் நவம்பர் 15 ஆம் தேதி முடிய 690 மகளிர் சுய உதவிக்குழுக்களை சேர்ந்த 8725 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ.67.12 கோடி கடனாக வழங்கப்பட்டு, குழு உறுப்பினர்களுக்கு குடும்பங்கள் முன்னேற்றம் அடைந்து குடும்பப் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்று வருகின்றன.

பிற்படுத்தப்பட்டோரை மேம்படுத்தும் வண்ணம் டாப்செட்கோ திட்டத்தின் கீழ் 633 நபர்களுக்கு ரூ.369.50 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. சிறுபான்மையினரை மேம்படுத்தும் பொருட்டு டாம்கோ திட்டத்தின் கீழ் 47 நபர்களுக்கு ரூ.29.50 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இப்படி ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எண்ணிலடங்கா திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திவருகின்றார்கள்.

இவ்வாறு தெரிவித்தார்.

பின்னர் கூட்டுறவுத் துறையின் சார்பில் மகளிர் சுயஉதவிக்குழுக்கடன், கறவை மாடு கடன் என பல்வேறு திட்டங்களின் மூலம் 68 பயனாளிகளுக்கு ரூ.4.30 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு கடன் உதவிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட அளவில் சிறந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், அனைத்து வகை கடன்களையும் தவணை தவறாமல் 100% முழுமையாக வசூல் செய்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், அதிக அளவில் சுய உதவி குழுக்களுக்கு கடன் வழங்கிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், அதிக அளவில் பயிர்கடன் வழங்கிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம், அதிக அளவில் கால்நடை பராமரிப்பு கடன் வழங்கிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் போன்ற சிறப்பாக செயல்பட்ட கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், கூட்டுறவு வார விழாவினை முன்னிட்டு பள்ளி மாணவ,மாணவிகளுக்கிடையே நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கும் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நினைவுப் பரிசுகளை வழங்கி பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெரம்பலூர் நகர்மன்றத் தலைவர் திருமதி அம்பிகா இராஜேந்திரன், பெரம்பலூர் ஒன்றியக்குழு தலைவர் திருமதி மீனா அண்ணாதுரை, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைபதிவாளர் க.பாண்டியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் துணைத்தலைவர் ம.முத்தமிழ்ச்செல்வி மதியழகன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தழுதாழை பாஸ்கர், டாக்டர் அ.கருணாநிதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### இலண்டன்-முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்ப் பண்பாட்டு மையம் - கலைஞர் அயலக உடன்பிறப்புக் குழு சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு காணொலிக் கூட்டம்!

## எம்.எம்.அப்துல்லா எம்.பி. சிறப்புரை!

இலண்டன், நவ. 21 -

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்ப் பண்பாட்டு மையம் லண்டன் மற்றும் கலைஞர் அயலக உடன் பிறப்புக்கள் குழு நடத்தும் 100 காணொலி கூட்டத்தொடரில் இன்று (21.11.2023-செவ்வாய்க் கிழமை) இந்திய நேரம் மாலை 7:30 மணிக்கு நடைபெற உள்ள 50வது காணொலிக் கூட்டத்தில் தி.மு.க அயலக அணிச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான. எம்.எம். அப்துல்லா கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இக்காணொலிக் கூட்டத்தில் முத்தமிறிஞர் கலைஞரின் சாதனைகள்,சமூக நீதிக்கென அவர் நிகழ்த்திய போராட்டங்கள்,அயலகத் தமிழர்களுக்கென அவர் செய்த சாதனைகளை எடுத்துரைக்கிறார்.

மேலும் வரும் 2024 ஜனவரி மாதம் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கவிருக்கும் அயலக தமிழர் தின நிகழ்ச்சிகளை யும் தற்போதைய தி.மு.க அரசு அயலக தமிழர்களுக்கு செய்துள்ள பல நன்மைகள் பற்றியும் உரையாற்றுகிறார்.உலகெங்கும் வாழும் தமிழர்கள், அயலக அணி தி.மு.க.வினர் இக்காணொலிக் கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர்.

இக்காணொலிக் கூட்டத்தை வெளிநாடு வாழ் தமிழர் நலச் சங்கச் செயலாளரும்முத்தமிழறிஞர்கலைஞர் தமிழ்ப் பண்பாட்டு மையத் தலைவருமான லண்டன் அ. செந்தில்குமார் ஒருங்கிணைக்கிறார்.



பெரம்பலூர் மாவட்டத்தில் 2024ம் ஆண்டிற்கான உலக முதலீட்டாளர்கள் மாநாடு ஜனவரி மாதம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற மாவட்ட அளவிலான தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், சிறு, குறு தொழில் முனைவோர் மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்களுடனான சிறப்பு நோக்குக் கூட்டத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி க.கற்பகம் ஆகியோர் முன்னிலையில் ரூ.54.58 கோடி மதிப்பில் பல்வேறு தொழில்கள் தொடங்க உள்ள 11 நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு பரிமாறிக்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் குன்னம்.சி.இராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் திருவெறும்பூர் வடக்கு தெற்கு ஒன்றியம் துவாக்குடி நகரம் மற்றும் கூத்தப்பார் பேரூர் கழகத்தைச் சேர்ந்த பாக முகவர்கள் மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம் திருவெறும்பூர் தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.என்.சேகரன், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் செங்குட்டுவன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.எஸ்.எம்.கருணாநிதி, கங்காதரன், நகரக் கழகச் செயலாளர் காயாம்பு, பேரூர் கழகச் செயலாளர் தங்கவேல், பாக முகவர்கள் பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### இளைஞர் அணி 2வது மாநில மாநாடு:

# புதுக்கோட்டைக்கு வருகை தந்த இரு சக்கர வாகன பிரச்சாரப் பேரணி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் வரவேற்றனர்!

புதுக்கோட்டை, நவ. 21-

மாநில உரிமை மீட்புக்கான கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாடு சேலத்தில் டிசம்பர் 17 ஆம் தேதி நடைபெறவுள்ளதை முன்னிட்டு, இந்த முக்கியத்துவமிக்க மாநாட்டின் முழக்கத்தை, தமிழ்நாட்டின் பட்டி தொட்டியெங்கும் சேர்க்கின்ற விதமாக, 188 இரு சக்கர வாகனங்களைக் கொண்ட வாகனப் பேரணியை கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை எதிரே கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழக . விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் துவக்கி .வைத்த இரு சக்கர வாகனப் பேரணி, கழக வரலாற்றில் என்றைக்கும் நிலைத்திருக்கும் வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தை வந்தடைந்தது. இந்தப் பயணத்தை மேற்கொள்ளும் கழக இளைஞர் படைக்கு, புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் தலைமையில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு. சண்முகம், இளைஞரணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துச்சாமி, விளாப்பட்டி சிவா, கந்தர்வக்கோட்டை ஸ்டாலின், அன்சாரி ஆகியோர் முன்னிலையில்,கவிச்சுடர் கவிதைப்பித்தன், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி, கீரை. தமிழ் ராஜா, என்.சாத்தையா, ஆர்.செல்லத்துரை, ஆர். ஆர்.சாமிநாதன், எம்.எம். பாலு, அ.ரெத்தினம், செந்தாமரை பாலு, கவிவேந்தன், வே.ராஜேஸ், வி.என். எம்.பாலமுருகன், கை.பழனிச்சாமி, .தெய்வானை, ரெத்தினசபாபதி, ராஜேந்திரன், ராஜதுரை, பிரபு, காதர் கனி, ஜாகீர் உசேன், பால்ராஜ், செ.கணேஷ், சுதாகர், ஞானவேல், மகேந்திரன், ஹரிகரன், ஜெரால்டு நிக்கேஸ், ஐயப்பன், தங்கவேல், கரிகாலன், கற்பூரச் சோழன், முருகேசன். உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் வரவேற்று வாழ்த்துகளை தெரிவித்தனர்.

### கொடுமுடி வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வி.எம்.சின்னசாமி மகன்-

# ஈரோடு தெற்கு மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் சி.முத்துகுமார் மணவிழா!

## அந்தியூர் ப.செல்வராசு எம்.பி. - அமைச்சர்கள் சு.முத்துசாமி - மு.பெ.சாமிநாதன் -அர.சக்கரபாணி மற்றும் மு.கண்ணப்பன் - தளபதி முருகேசன் வாழ்த்து!

ஈரோடு, நவ. 21 -

ஈரோடு தெற்கு மாவட்டம் கொடுமுடி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வி.எம்.சின்னசாமி மகனும் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளருமான சி.முத்துகுமார் - எஸ்.எஸ். சுதர்சனா ஆகியோரது திருமண விழாவில் அந்தியூர் ப.செல்வராசு, சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், அர.சக்கரபாணி, மு.கண்ணப்பன், தளபதி முருகேசன் பங்கேற்று வாழ்த்தினர்.

ஈரோடு தெற்கு மாவட்டம் கொடுமுடி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வி.எம்.சின்னசாமி - சி.பழனியம்மாள் ஆகியோரது மகனும் ஈரோடு தெற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளருமான சி.முத்துகுமார், கோவை சக்திவேல் - ஸ்ரீஜெயந்தி ஆகியோரது மகள் எஸ். எஸ்.சுதர்சனா ஆகியோர் திருமண விழா 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை கருமத்தம்பட்டி , அன்னூர் சாலையில் உள்ள கிட்டாம்பாளையம் எம்.எஸ்.மஹாலில் நடைபெற்றது.

இம்மணவிழாவில் கழக துணை பொதுச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராசு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அர.சக்கரபாணி, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் மு.கண்ணப்பன், கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்து மணமக்களை வாழ்த்தினர்.

திருமண விழாவில் மாநில, மாவட்ட, மாநகர, நகர ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக நிர்வாகிகள், அனைத்துக் கட்சி பிரமுகர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

# நாமக்கல் மாவட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சிகள்!

## கிழக்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

நாமக்கல், நவ. 21 -

நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி, வெளியிட்டுள்ள அறிக்கையில்



இன்று (21-ந் தேதி) கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள உள்ளார். அவர் பங்கேற்கும் நிகழ்ச்சிகள்:-

மதியம் 1.00 மணி - நாமக்கல் ஒன்றியம் நாமக்கல் கிழக்கு மாவட்ட எல்லையான அணியாரில் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நாமக்கல் ஒன்றிய செயலாளர் வி.கே.பழனிவேல் தலைமையில் வரவேற்பு அளித்தல்.

மாலை 3.00 மணி - நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சேவையை துவக்கி வைத்தல் .

3.45 மணி- புதுச்சத்திரம் ஒன்றியம் தேசிய நெடுஞ்சாலை கருங்கல்பாளையத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு புதுச்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.பி.கௌதம் மற்றும் புதுச்சத்திரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் ஆர்.ஜெயபிரகாஷ் ஆகியோர் தலைமையில் வரவேற்பு அளித்தல்.

4.00 மணி - பொம்மைகுட்டை மேடு கழக இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறும்.

இச்செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறும் திடலுக்கு மறைந்த மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.அருணகிரி அவர்களின் பெயர் சூட்டி அவர்களின் நினைவு கொடி கம்பத்தில் கொடி ஏற்றுதல் நிகழ்ச்சி நடைபெறும்.

நுழைவாயிலுக்கு மறைந்த மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.உதயகுமார், மறைந்த வெண்ணந்தூர் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஏ.சுந்தரம் ஆகியோரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.

நிகழ்ச்சி நடைபெறும் மேடைக்கு மறைந்த நாமக்கல் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கண்ணன், மறைந்த நாமகிரிப்பேட்டை பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ். மோதில்ராஜ், மறைந்த காளப்பநாயக்கன்பட்டி பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர். மணிவேல் ஆகியோரது நினைவாக அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

5.00 மணி - இராசிபுரம் நகரம், இராசிபுரம் ஒன்றியம் சேலம் ரோடு தேசிய நெடுஞ்சாலை ஆண்டலூர் கேட் பாலம் முடியும் இடத்திலிருந்து வழி நெடுக கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இராசிபுரம் நகரச் செயலாளர் என்.ஆர். சங்கர் மற்றும் இராசிபுரம் ஒன்றியம் செயலாளர் கே.பி.ஜெகநாதன் ஆகியோர் தலைமையில் வரவேற்பு அளித்தல்.

5.30 மணி - வெண்ணந்தூர் ஒன்றியம், அத்தனூர் தேசிய நெடுஞ்சாலை தேங்கல்பாளையம் பிரிவு ரோட்டில் வெண்ணந்தூர் ஒன்றியம்,போதை மலைக்கு ரூ.140 கோடி மதிப்பீட்டில் சாலை அமைத்து கொடுத்தமைக்கு வெண்ணந்தூர் ஒன்றியச் செயலாளர் ஆர். எம்.துரைசாமி தலைமையில் நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

இவ்வாறு கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மயிலாடுதுறை மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., அறிவிப்பு!

நாகை, நவ. 21-

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ.விடுத்துள்ளஅறிக்கை வருமாறு:

மயிலாடுதுறைமாவட்ட தி.மு.க.செயற்குழுகூட்டம் இன்று (21.11.2023) மாலை 4.00மணிக்குமயிலாடுதுறையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் மாவட்ட கழக அவைத்தலைவர்கே.ஜி.சீனிவாசன் தலைமையில் நடைபெறுகிறது கூட்டத்தில் மாநில மாவட்டக்கழக நிர்வாகிகள் நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்



பொருள்.

1. டிசம்பர்17 சேலத்தில் இளைஞர்அணி2வதுமாநில மாநாடு குறித்து.

2.தலைமைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டபி.எல்.ஏ. 2, மற்றும் பி எல்.சி. யினர் பணிகளைதுரித படுத்துதல்

3. மயிலாடுதுறைமாவட்டத்திற்குகழகஇளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரும் 22மற்றும்.23தேதிகளில்இரு சக்கர வாகன பிரச்சார பேரணி குறித்து

4. வரும் 25 மற்றும் 26ம் தேதியில்நடைபெறும்வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம் குறித்து.

5வரும்2711.2023.அன்று கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா குறித்து

6.கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு மாவட்டக்கழகச்செயலாளர்நிவேதாஎம். முருகன்எம்.எல்.ஏ.தெரிவித்துள்ளார்.



நாள் : 21 – 11 – 2023,
செவ்வாய்க்கிழமை
இடம் :
பொம்மைக்குட்டை மேடு,
நாமக்கல்

**நாமக்கல்
கிழக்கு – மேற்கு
மாவட்ட தி.மு.க.
இளைஞர் அணி**

**செயல்வீரர்கள்
கூட்டத்திற்கு
வருகை தரும்**

கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் (ம)
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

# இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின்

*அவர்களை வருக.. வருக... என
அன்புடன் வரவேற்கிறோம்...*





மறைந்த இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்
**இரா.அருணகிரி**
**நினைவுத் திடல்**



மறைந்த இளைஞர் அணி மாவட்ட துணைஅமைப்பாளர்
**K.உதயகுமார்**



மறைந்த வெண்ணந்தூர் ஒன்றிய
இளைஞர் அணி துணை அமைப்பாளர்
**A.சுந்தரம்** ஆகியோர்
**நினைவு நுழைவு வாயில்**



மறைந்த நாமக்கல் ஒன்றிய
இளைஞர் அணி துணை அமைப்பாளர்
**S.கண்ணன்**



மறைந்த நாமகிரிப்பேட்டை பேரூர்
இளைஞர் அணி துணை அமைப்பாளர்
**S.மோதில்ராஜ்**



மறைந்த காளப்பநாயக்கன்பட்டி பேரூர்
இளைஞர் அணி துணை அமைப்பாளர்
**R.மணிவேல்** ஆகியோர்
**நினைவு மேடை**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
மாண்புமிகு **உதயநிதி ஸ்டாலின்**
அவர்கள் முயற்சியில் நாமக்கல் மாவட்டம் பெற்ற சிறப்பு திட்டங்கள் சில...

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், வெண்ணந்தூர்
ஊராட்சி ஒன்றியம், போதமலைக்கு 32 கி.மீ சாலை அமைக்க
**ரூ.140 கோடி** மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து பணி
துவங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மக்களின் நீண்டநாள் கோரிக்கையான நாமக்கல் புறவழிச்சாலை
மற்றும் புதிய பேருந்து நிலையத்திற்கு அணுகுசாலை அமைப்பதற்கு
**ரூ.190 கோடி** மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து பணி
துவங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அன்புடன்
வரவேற்று மகிழும்... **கே.ஆர்.என்.இராஜேஸ்குமார்** B.Com., D.C.M., M.P.
மாவட்டக் கழகச் செயலாளர் / பாராளுமன்ற உறுப்பினர் (மாநிலங்களவை)

Dr. **மா.மதிவேந்தன்** வனத்துறை அமைச்சர்
கழக ஆதிதிராவிடர் நலக்குழு துணைத் தலைவர்

**K.பொன்னுசாமி** M.L.A.
மாவட்ட துணைச் செயலாளர் / சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி

**P.ராமலிங்கம்** M.L.A.
நாமக்கல் சட்டமன்றத் தொகுதி

**சி.ஆனந்தகுமார்**
கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்

# நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க.



கலைஞர் 100
1924 - 2023
21.11.2023
2500 கழகம் காத்த மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கவும்,
இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்கவும்
ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தரும்
கழக இளைஞர் அணி செயலாளர்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை
வருக! வருக! என அன்புடன் வரவேற்கும்...
ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க.


கருப்பு சிவப்பு படைவீரன்!
களத்தில் வெல்லும் கடமை வீரன்!
( 21 - 11 - 2023 ) இன்று
நாமக்கல் கிழக்கு - மேற்கு
மாவட்டக் கழக இளைஞர் அணி
செயல்வீரர்கள் கூட்டத்தில்
பங்கேற்க வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் (ம)
விளையாட்டு மேம்பாட்டுத்துறை
அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக.. வெல்க!
மாண்புமிகு Dr. மா.மதிவேந்தன்
வனத்துறை அமைச்சர் / கழக ஆதிதிராவிடர் நலக்குழு துணைத் தலைவர்
வரவேற்று மகிழும்... S.M.மதுரா செந்தில் மாவட்டக் கழகச் செயலாளர்
நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.



நாள் : 21.11.2023
செவ்வாய்க்கிழமை
மாலை 4 மணி
இடம் : பொம்மைகுட்டை மேடு,
நாமக்கல் மாவட்டம்
நாமக்கல் மாவட்ட இளைஞர் அணி
செயல் வீரர்கள் கூட்டத்தில்
சிறப்புரையாற்ற வருகை தரும்
கழக இளைஞரணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
ARASU ARTS
உதயநிதி
ஸ்டாலின்
அவர்களே
வருக. வருக..
S.M.மதுரா செந்தில் BA.,
நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர்
Dr. மா.மதிவேந்தன்
மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
R.பாலாஜி
மாவட்ட அமைப்பாளர்
D.சுந்தர் - S.கதிரவன் - G.ஜெகதீஸ்குமார் - C.கார்த்திகேயன் - க.முரளி
மாவட்ட துணை அமைப்பாளர்கள்
பாசமுடன் வரவேற்கும்
பா.நவலடி ராஜா MCA., LLB.,
மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்
நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி

இளைஞர் அணியின் பெருமையை

# நாடே உணரும் வகையில் மாநாட்டை நடத்திக் காட்டுவோம்!

## அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற்ற மாநாட்டுக் குழுக்களின் செயலாளர்கள் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!



சென்னை, நவ.21

**“ இளைஞர் அணியின் பெருமையை நாடே உணரும் வகையில் மாநாட்டை நடத்திக் காட்டுவோம்” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.**

கழக இளைஞர் அணியின் 2ஆவது மாநில மாநாடு வரும் டிசம்பர் மாதம் 17–ஆம் தேதி சேலம் மாவட்டத்தில் நடைபெற உள்ளது. மாநாட்டுப் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக தலைமைக் கழகத்தால் 23 குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. அந்த குழுக்களின் செயலாளர்களு டனான ஆலோசனைக் கூட்டம், கழக முதன் மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு பேசியதாவது:

“இளைஞர் அணியின் மாநில மாநாட்டுப் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மாநாட்டுக்கு ழுக்களில் இடம்பெற்றுள்ள குழுவின் செயலா ளர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள அமைச் சர் – கழகத்தின் முதன்மைச் செயலாளர் அண்ணன் கே.என்.நேரு அவர்களுக்கும் மாநாட் டுக் குழுக்களின் அனைத்து செயலாளர்களுக்கும் முதலில் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாநாடு என்பது அடிக்கடி நடைபெறுவது அல்ல. எப்போதாவது ஒருமுறைதான் நடைபெ றுகிறது. நம் இளைஞர் அணியின் மாநில மாநாடு 16 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் நடை பெறுகிறது. அந்த சமயத்தில் நாம் இளைஞர் அணியில் இருக்கிறோம் என்பதே நமக்கான பெருமை. அதுவும் இந்த மாநாட்டுப் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட குழுக்களில் நாம் இடம்பெற்றி ருக்கிறோம் என்பது கூடுதல் பெருமை. அந்தவ கையில் பல்வேறு மாநாட்டுக் குழுக்களில் இடம் பெற்றுள்ள உங்களுக்கு மீண்டும் என் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மிகச் சரியாக வடிவமைக்க முடியும்!**

வரும் டிசம்பர் 17–ஆம் தேதி சேலத்தில் நடை பெற உள்ள இளைஞர் அணி மாநாடு, நம் இளை ஞர் அணியின் பெருமையை, கழகத்தின் கட்ட மைப்பைஇந்திய ஒன்றியமே உணர்ந்துகொள்ளும் வகையில் நடைபெற இருக்கிறது. ஒரு நிகழ்ச் சியை சிறப்பாக நடத்துவதற்கு திட்டமிடுதல் என்பது மிகமிக அவசியமான ஒன்று. அந்த நிகழ்ச்சியின் நோக்கம் என்ன என்பதை உணர்ந் தால்தான், அந்த நோக்கம் நிறைவேறும் வகை யில் அந்த நிகழ்ச்சியை மிகச்சரியாக வடிவ மைக்க முடியும்.

100 பேர் கூடும் தெருமுனைப் பிரச்சாரக் கூட் டத்துக்கே, பேச்சாளராக யாரை அழைக்கலாம், என்ன தலைப்பின் கீழ் அவரை பேச வைக்க லாம், பின்னணியில் ஃப்ளெக்ஸ் வைக்கலாமா, எல்இடி வைக்கலாமா? அப்படி வைக்கப்படும் ஃப்ளெக்ஸ் பேனரில் என்னென்ன வாசகங்கள் இடம் பெற வேண்டும், உள்ளூர் கட்சி நிர்வாகி களுக்கு முறையாக தகவல் தெரிவிப்பது, மீடியா வுக்கு தகவல் சொல்வது, துண்டறிக்கை தயார் செய்வது... என பல்வேறு விஷயங்களை திட்ட மிடுவோம்.

100 பேர் கூடும் கூட்டத்துக்கே அந்தளவுக்கு திட்டமிடுகிறோம் என்றால், லட்சக்கணக்கான இளைஞர்கள் கூடும் நம் இளைஞர் அணி மாநில மாநாட்டுக்கான ஏற்பாடுகள் எந்தளவுக்கு நேர்த் தியாக திட்டமிடப்பட வேண்டும் என்பதை நீங் கள் அனைவரும் உணர்ந்திருப்பீர்கள்.

**பல மாநாடுகள் நடத்தியவர் அண்ணன் நேரு அவர்கள்!**

மாநாட்டுக்கான பணிகளை நாம் அனைவரும் இணைந்துதான் செய்யப்போகிறோம். ஆனால் இந்தப் பணியை அவர் பார்த்துவிடுவார், இவர் பார்த்துக்கொள்வார் என்று இருந்து எந்தப் பணி யும் விடுபட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அமைக் கப்பட்டுள்ள ஒவ்வொரு குழுவின் பணி என்ன என்பது குறித்து உங்கள் ஒவ்வொருவருக்கும் அன்பகத்தின் மூலம் தெளிவாக தெரிவிக்கப் பட்டு அதுகுறித்து விளக்கிக் கூறப்பட்டு உள் ளது.

**வெற்றிகரமாக நடத்திக் காட்டுவோம்!**

இந்த மாநாட்டை நடத்துவதற்கு நமக்கு மிகப் பெரிய பலமாக முதன்மைச் செயலாளர் அண் ணன் நேரு அவர்கள் உள்ளார்கள். பல மாநாட்டை நடத்திய அனுபவம் அவருக்கு உள்ளது. இதில் நாம் என்ன தவறு செய்வோம் என பலர் காத்தி ருக்கிறார்கள். அதனால் விமர்சனத்துக்கு இடம ளிக்காமல், இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக்காட்ட வேண்டிய பொறுப்பு நம் அனை வருக்கும் உள்ளது.

**தலைவரின் நம்பிக்கையை நிரூபிப்போம்!**

சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் பாக தலைமைக் கழகமே மாநில மாநாட்டையோ, மண்டல மாநாட்டையோ நடத்துவது வழக்கம். ஆனால் வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக மாநாட்டை நடத்தும் மிகப்பெரிய வாய்ப்பை, பொறுப்பை நம் கழகத் தலைவர் அவர்கள் இளைஞர் அணிக்கு வழங்கியுள்ளார் கள். தலைவர் அவர்கள் நம் மீது வைத்துள்ள நம்பிக்கையை நம் செயலின் மூலம் நிரூபிக்க வேண்டியது நம் கடமை.

மாநாட்டுப் பணிகள் குறித்து உங்களுக்கு என்ன சந்தேகம் இருந்தாலும் அமைச்சர் நேரு அண்ணன் அவர்களையும், அங்குள்ள மாவட்டச் செயலாளர்களிடமும், அன்பகத்திலும் நீங்கள் கேட்டுத் தெளிவு பெறலாம். வரும் 22ம் தேதி காலை சேலத்தில் செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு முன்பாக மாநாட்டுத் திடலை நேரு அண்ணன் அவர்களுடன் சென்று பார்வையிட உள்ளோம். அப்போதும் குழு செய லாளர்களான நீங்கள் வந்தால் திடலை பார்க் கும்போது நமக்கு தெளிவு கிடைக்கும். 22ம் தேதி காலை சேலத்தில் சந்திப்போம்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

அதைத்தொடர்ந்து, மாநாட்டுக் குழுக்களின் செயலாளர்கள் ஒவ்வொருவரும் தங்களின் கருத் துகளை, எண்ணங்களை எடுத்துக் கூறினர். கூட் டத்தின் முடிவில் கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் உரையாற் றினார்.



மேனாள் இந்தியப் பிரதமர் சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழா 27.11.2023 அன்று சென்னையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற வுள்ளதையொட்டி சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ள உத்தரப்பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் அவர்களுக்கு நேற்று முன்தினம் (19.11.2023) கழகப் பொருளாளர் – நாடாளுமன்றக் குழு தலைவர் டி.ஆர். பாலு நேரில் சென்று அழைப்பிதழை வழங்கினார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி சார்பில்

# ஆலவயலில் கலைஞர் நூற்றாண்டு விழா! இலவச பொது மருத்துவ முகாம்!

## டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை ரகுபதி தொடங்கி வைத்தார்!

புதுக்கோட்டை, நவ. 21 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் ஆலவயல் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் நூற்றாண்டு பிறந் தநாள் விழாவை முன் னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி மற்றும் கற் பக விநாயகா மருத்துவ மற் றும் பல் மருத்துவக் கல்லூரி செங்கல்பட்டு இணைந்து நடத்திய இலவச பொது மருத்துவ முகாம் மற்றும் பல் மருத்துவ முகாம் நடை பெற்றது.

மருத்துவ முகாமை மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் எஸ். ஆர்.அண்ணாமலை ரகுபதி தலைமையேற்று தொடங்கி வைத்தார்.

இதில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, குழந்தை நல மருத்துவம், மகப்பேறு மற்றும் பெண் கள் நல மருத்துவம், கண் மருத்துவம், காது,மூக்கு தொண்டை மருத்துவம். சர்க்கரை நோய் சிகிச்சை. எலும்பு மூட்டு. முதுகு தண் டுவட மருத்துவம், தோல் நோய், மருத்துவம், சிறுநீரக நோய் மருத்துவம் இருதய நோய் மூளை நரம்பியல், குடல், கல்லீரல், கணையம் உள்ளிட்ட நோய்களுக்கு மருத்துவம் செய்யப்பட் டது. மேலும் பல் சுத்தம் செய்தல். சொத்தைப்பல் அடைத்தல், பல் செட்டு கட்டுதல் போன்ற சிகிச்சை கள் செய்யப்பட்டன.

மேலும் இ.சி.ஜி., சுருள் படம் எக்கோ ஸ்கேன், அனைத்து விதமான ரத்தம் மற்றும் சிறுநீரக பரிசோத னைகள் யூ.எஸ்.ஜி. எக்ஸ்ரே, பிசியோதெரபி போன்ற வைகள் எடுக்கப்பட்டன. மருத்துவ முகாமில் 1000க் கும் மேற்பட்ட பொதுமக் கள் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர். இந்நி கழ்வுகளில் மருத்துவர் அணி மாவட்ட அமைப்பா ளர் டாக்டர் சுதர்சன், மாவட்ட தலைவர் டாக் டர் சதீஷ், மாவட்ட துணை அமைப்பாளர் டாக்டர் ராஜசேகரபாண்டியன், மாவட்ட துணைத்தலைவர் டாக்டர் கண்ணன், டாக் டர் கனகவேல், ஒன்றியச் செயலாளர்கள் அ.அடைக் கலமணி, அ.முத்து, பேரூ ராட்சி தலைவர் சுந்தரி அழ கப்பன், திருமயம் தொகுதி தகவல் தொழில்நுட்ப பிரிவு ஆலவயல் முரளி சுப்பையா, மீனாட்சி மணிகண்டன், அன்னராசு உள்ளிட்ட நிர் வாகிகள் கலந்து கொண்ட னர்.

# அரியலூர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், நவ. 21 -

அரியலூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம், மாவட்டக் கழக அலுவலகத் தில் கழக சட்டத்திட்ட திருத் தகுழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமை யில், கழக மாநில இளைஞ ரணி துணைச் செயலாளர் ஆனந்தகுமார், ஜெயங் கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண் ணன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ச.அ. பெருநற்கிள்ளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம். பி.பாலசுப்ரமணியன் ஆகி யோர் முன்னிலை யில் நடை பெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்டக் கழகச் செயலா ளர், தமிழ்நாடு அரசு போக் குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் கலந்து கொண்டு வருகின்ற டிசம் பர்17 ஆம் தேதி சேலத்தில் நடைபெறும் இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டிற்கு நமது மாவட் டத்தில் இருந்து பெருந்திர ளாக பங்கேற்பது குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகி களுடன் உரையாற் றினார்.

கூட்டத்தில் நிறை வேற் றப்பட்ட தீர்மானங்கள்

அரியலூர் மாவட்ட அவைத்தலைவர் சிவ. மாணிக்கம் அவர்களின் மறை விற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

அரியலூர் மாவட்டத் திற்கு வருகை தர உள்ள எழுச்சி மிகுந்த இளைஞரணி மாநாடு குறித்த இருசக்கர வாகன அணிவகுப்பை வர வேற்று அந்த அணிவகுப்பில் கலந்துகொள்வது என தீர்மா னிக்கப்படுகிறது.

அரியலூர் மாவட்டம் முழுவதும் இல்லம் தேடி உறுப்பினர் சேர்த்தல் மற்றும் நீட் விலக்கு கையெழுத்து இயக்கத்தில் பங்கேற்று அதன் விளக்கங்களை பொது மக்களிடத்தில் எடுத்துகூறி பெருவாரியான கையெ ழுத்து பெறவேண்டும் என இக்கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

எதிர்வருகின்ற டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி சேலத் தில் நடைபெறும் கழகத்தின் இளைஞரணி மாநில இரண் டாவது மாநாட்டிற்கு அரிய லூர் மாவட்டத்தில் இருந்து 5000 ஆயிரத்திற்கும் மேற் பட்டோர் பெருமளவில் கலந்துகொள்ளவது என இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படு கிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர்கள் மு. கணேசன், சி.சந்திரசேகரன், லதா பாலு, மாவட்டப் பொருளாளர் கு.இராஜேந்தி ரன், ஒன்றிய கழக செயலா ளர்கள் தனசேகர், இரா. கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், வா.சௌந் தரராஜன், மா.அன்பழகன், கோ.அறிவழகன், அசோகசக் ரவர்த்தி, ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், வி. எழில்மாறன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.முருகே சன், வெ.கொ. கருணாநிதி, பேரூர் செயலாளர்கள் கோபாலகிருஷ்ணன், அல் போன்ஸ், மாவட்ட இளை ஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா,

மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு, சி.ஆர்.எம்.பொய்யாமொழி, வி.எம். ஷாஜகான், சுமதி கரு ணாநிதி, மாவட்ட அணிக ளின் அமைப்பாளர்கள் கே. சி.லூயிகதிரவன், க.தர்ம துரை, எஸ்.ஆர்.இராமரா ஜன், என்.ஆர்.இராமதுரை, செ.இளஞ்செழியன், செல் வம், எம்.ஜி.இராஜேந்திரன், ஆதி.இளங்கோவன், ரவிகு மார், ஜெயகுமார், கொன்டி யார் செல்வராஜ், பானுமதி இராஜேந்திரன், மீனா சாமி நாதன், வின்சென்ட் ராஜா, கருப்புசாமி, குலோத்துங்கன், க.அருண்ராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப் பாளர்கள் முருகேசன், வசந்த பகலவன், வீரசிவா மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

கடந்த மூன்று வாரங்களில் 3000 முகாம்கள் என்று அறிவிக்கப்பட்டு

# 6000 க்கும் மேற்பட்ட முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, நவ.21

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 18.11.2023 அன்று சென்னை, நொச்சிக்குப் பம் பகுதியில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்களை தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களி டம் அவர் தெரிவித்ததாவது:

கடந்த மாதம் 23.10.2023ந்தேதி தொடங்கி வருகின்ற டிசம்பர் 30.12.2023 ந் தேதி வரை இடைப்பட்ட சனிக்கிழமைகளில் மழைக் கால சிறப்பு முகாம்கள் நடத் தப்படும் என்று அறிவிக்கப்பட் டது. கடந்த மாதம் முதல் தற்போது வரை 4 முகாம்கள் நடத்தப்பட்டிருக்கிறது. கடந்த மூன்று வாரங்களில் நடை பெற்ற முகாம்களை பொறுத்த வரை ஒவ்வொரு வாரமும் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்த முகாம்களில் பயன்பெற்றிருந் தனர். ஒவ்வொரு வாரமும் 1000 முகாம்கள் என்று அறிவிக் கப்பட்டு ஒவ்வொரு வாரமும் 2000த்திற்கும் மேற்பட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வரு கிறது. ஒவ்வொரு வாரமும் நடைபெறும் மருத்துவ முகாம் களில் 476 மருத்துவ நடமாடும் குழுக்களும், 805 RBSK வாக னங்களின் மூலம் பள்ளிச்சிறார் களுக்கான முகாம்களும் நடத் தப்பட்டு வருகிறது. கடந்த மூன்று வாரங்களில் 6000த்திற் கும் மேற்பட்ட முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இன்று 4வது வாரம் நொச்சிக்குப்பம் பகுதியில் நடைபெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து அடுத்த வாரம் 25.11.2023ந்தேதி முகாம் நடைபெற உள்ளது. பெருநகர சென்னை மாநக ராட்சியினைப் பொறுத்தவரை ஒவ்வொரு மண்டலத்திற்கும் 3 என்கின்ற வகையில் 45 மருத் துவ முகாம்கள் திட்டமிடப்பட்டு நடத்தப் பட்டு வருகிறது.

வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் டெங்கு, இன்புளுயன்சா காய்ச்சல், அதிகரிக்க வாய்ப்பு இருப்பதால் இதனைக் கட்டுப் படுத்துகின்ற நோக்கில் தமிழ் நாட்டின் முதலமைச்சர் அவர் களின் வழிகாட்டுதலின்படி இந்த முகாம்கள் தொடர்ச்சி யாக நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை நடைபெற்ற முகாம் களில் சுமார் 500க்கும் மேற்பட் டவர்களுக்கு காய்ச்சல்களும், வறண்ட இருமல்களும், சளி போன்ற பல்வேறு பாதிப்புக ளுக்கு உள்ளானவர்கள் கண்ட றியப்படுகிறார்கள். அப்படி கண்டறியப்படுபவர்களுக்கு தொடர் சிகிச்சைகள் நடத்தப் படுகின்றது. ஒன்றிய அரசு பல் வேறு மாநிலங்களில் டெங்கு போன்ற பல்வேறு பாதிப்புகள் ஏற்படும் என்று கடந்த 10 நாட் களுக்கு முன்பு சுற்றறிக்கை அனுப்பியிருந்தார்கள். ஆனால் தமிழ்நாட்டினைப் பொறுத்த வரை கடந்த மூன்று மாதங்க ளுக்கு முன்பாகவே மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் பெருநகர சென்னை மாநக ராட்சி மூலமாகவும் பருவ மழை தொடங்குவதற்கு முன் பாகவே பல்வேறு நடவடிக்கை களை தொடங்கியிருக் கிறோம். பல்வேறு துறை செய லாளர்களுடனான ஒருங்கி ணைப்புக் கூட்டம், மாவட்ட அதிகாரிகளுடான ஒருங்கி ணைப்புக் கூட்டம், மக்கள் பிர திநிகளுடான ஒருங்கிணைப் புக் கூட்டம், தலைமைச் செயலாளர்களுடான அனைத்து துறைகளின் ஒருங்கி ணைப்புக் கூட்டம் என்று தொடர்ச்சியாக நடத்தி மருத் துவ முகாம்கள் நடத்துவது குறித்து திட்டமிடப்பட்டது.

இப்படி பல நடவடிக்கைக ளின் காரணமாக கடந்த ஜன வரி மாதம் முதல் தற்போது வரை டெங்குவினால் பாதிக் கப்பட்டவர்களின் எண் ணிக்கை 6,777 பேர் என்கின்ற வகையில் கட்டுப்படுத்தப்பட் டுள்ளது. இதுவரை மருத்துவம னைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களின் எண்ணிக்கை 564 பேர், நேற்றுக்கான பாதிப்பு 52, ஒவ்வொரு நாளும் 40 பேர் டெங்குவினால் பாதிக் கப்படுகின்றனர். தமிழ்நாட்டு அரசினைப் பொறுத்தவரை புகை அடிக்கும் மருந்துகள் Fogging Machines 16,005 லிட்ட ரும், Temephos என்கின்ற மருந்து 44,891 லிட்டரும் கையிருப்பில் இருக்கின்றது. Phyrethrum என்கின்ற மருந்து 61,513 லிட்டர் கையிருப்பில் இருக்கின்றது. Technical Malathion என்கின்ற மருந்து 10561 லிட்டர் கையிருப்பில் இருக்கின்றது.

தமிழ்நாட்டின் முதலமைச் சர் அவர்களால் கடந்த ஜீன் திங்கள் 6ந்தேதி 500க்கும் மேற் பட்ட நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் திறந்து வைக்கப் பட்டுள்ளது. 708 நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் திறந்து வைக்கப்படும் என்று சட்ட மன்றத்தில் அறிவிக்கப்பட்டு அதில் 500க்கும் மேற்பட்ட நல வாழ்வு மையங்கள் இதுவரை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த 500 நலவாழ்வு மையங்க ளில் 140 நலவாழ்வு மையங்கள் சென்னையில் மட்டுமே இருக் கின்றது. இந்த 140இல் ஒன்று நொச்சிக்குப்பம் பகுதியில் உள்ள இம்மருத்துவமனை. இந்த நலவாழ்வு மையத்தில் தினமும் 50க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

இந்த நலவாழ்வு மையத்தில் ஒரு மருத்துவர், ஒரு செவிலி யர், ஒரு சுகாதார ஆய்வாளர், ஒரு உதவியாளர் என்று நான்கு பணியிடங்களுடன் இம்மருத் துவமனை இயங்கி வருகிறது.

சென்னை மாநகராட்சி யைப் பொறுத்தவரை 200 நல வாழ்வு மையங்கள் அமைக்கப் படும் என்று அறிவிக்கப்பட்டது. எனவே தற்சமயம் 140 நலவாழ்வு மையங்கள் தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

தற்சமயம் 35 நலவாழ்வு மையங்களுக்கான கட்டுமா னப் பணிகள் முடிவுறும் தரு வாயில் இருக்கின்றது. தமிழ் நாடு முழுவதிலும் 120 நலவாழ்வு மையங்களுக்கான கட்டுமானப் பணிகள் முடிவுற் றிருக்கிறது.

இந்த நலவாழ்வு மையங்க ளுக்கு மருத்துவம் சார்ந்த பணி யாளர்கள் நியமிக்கும் அரசு ஆணை வெளியிடப்பட்டு அதற்கான பணிகள் நடை பெற்று வருகிறது. இப்பணிகள் முடிவடைந்தவுடன் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்க ளால் விரைவில் திறந்து வைக் கப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, பெருநகர சென்னை மாநகராட்சி கூடு தல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி. ஷரண்யா அறி, மத்திய வட் டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்த டுப்பு மருந்துத்துறை இயக்கு நர் மரு.டி.சி.செல்வவிநாயகம், மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், மாமன்ற உறுப் பினர் திருமதி.அ.ரேவதி, மண் டல அலுவலர் உள்ளிட்ட உய ரலுவலர்கள் கலந்துகொண்ட னர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முதல்வர் – கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி கழக சட்டத்துறை சார்பில் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான 5வது மண்டல பேச்சுப்போட்டி கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ தலைமையில் பெருங்குடி டாக்டர். அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன், துணைச் செயலாளர்கள் பச்சையப்பன், சந்துரு, தலைமை கழக வழக்கறிஞர்கள் கே.ஜே.சரவணன், மறைமலை மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர். இப்போட்டிக்கு நடுவர்களாக தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றிக்கொண்டான் மற்றும் நன்மாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தஞ்சை தெற்கு மாவட்டம்,

# பேராவூரணியில் நீட் விலக்கு, நம் இலக்கு கையெழுத்து இயக்கம்!

## இளைஞர் அணி - மருத்துவ அணி - மாணவர் அணி சார்பில் நடைபெற்றது!

தஞ்சாவூர், நவ.21-

நீட் விலக்கு, நம் இலக்கு என்னும், நீட் தேர்வுக்கு எதி ரான கையெழுத்து இயக்கம், தஞ்சாவூர் தெற்கு மாவட் டம், பேராவூரணி இரயில் நிலைய வாயிலில் நடை பெற்றது.

கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதய நிதி ஸ்டாலின் முன்னெடுப் பில் நீட் தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து குடியரசுத் தலை வருக்கு நீட் தேர்வு எதிர்ப்பை தெரிக்கும் வகையில் ”50 நாட்களில் 50 இலட்சம் கையெழுத்து” என்ற மாபெ ரும் கையெழுத்து இயக்கம் தமிழகம் முழுவதும் நடை பெற்று வருகிறது.

இதனையடுத்து தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. மருத்துவர் அணி, மாணவர் அணி மற்றும் இளைஞர் அணி சார்பில் நடைபெற்ற கையெழுத்து இயக்கத்தை, தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் சுப.சேகர் தலைமை வகித்து கையெழுத்திட்டு தொடங்கி வைத்தார். மாவட்ட மருத்து வர் அணி அமைப்பாளர், டாக்டர் வி.சௌந்தர்ராஜன் அனைவரையும் வரவேற்று, நீட் விலக்கு அவசியம் குறித்து விளக்கிப் பேசினார்.

நிகழ்ச்சியில், தி.மு.க. ஒன் றியச் செயலாளர்கள் க.அன் பழகன், இளங்கோவன், மு.கி.முத்து மாணிக்கம், வை.ரவிச்சந்தி ரன், சோம. கண்ணப்பன், பேராவூரணி நகரச் செயலாளர் என்.எஸ். சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், என்.செல்வராஜ், ராஜரெத்தினம், அ.அப்துல் மஜீத், தனபால், வே.கார்த்தி கேயன், குழ.செ.அருள் நம்பி, அரவிந்த், மாணிக்கவாசகம், குமார், ஆனந்தராஜ், மதி, ஷாஜகான், மருத்துவர் அணி ராஜு, வினோத், லெனின், டாக்டர் சந்திரசேகரன் மற் றும் தி.மு.க.வின் பல்வேறு அமைப்புகளின் அமைப்பா ளர்கள், துணை அமைப்பா ளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏரா ளமானோர் கலந்து கொண்ட னர்.



அரியலூர் மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம்,மாவட்டக் கழக அலுவலகத்தில் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.இதில் மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு உரையாற்றினார். உடன் கழக மாநில இளைஞரணி துணை செயலாளர் ஆனந்தகுமார், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் சு.அ.பெருநற்கிள்ளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## மத்திய சிறை வளாகத்தில்
# டிரோன் கேமராக்கள் மூலம் கண்காணிக்கும் புதிய திட்டம்!
## தமிழக சிறைத்துறை முடிவு!

சென்னை, நவ.21-

மத்திய சிறை வளாகத்தில் டிரோன் கேமராக்கள் மூலம் கண்காணிக்கும் புதிய திட்டத்தை தொடங்க தமிழக சிறைத்துறை முடிவு எடுத்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள மத்திய சிறை வளாகங்கள் ஏற்கனவே சிசிடிவி கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. தற்போது சிறை வளாகம் முழுவதும் கண்காணிக்க டிரோன் கேமராக்கள் பயன்படுத்த சிறைத்துறை முடிவு செய்துள்ளது. சுற்றுச்சுவர் உட்பட சிறை வளாகத்தில் உள்ள அனைத்து பகுதிகளையும் டிரோன் கேமரா மூலம் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்புதலை தமிழ்நாடு அரசுக்கு சிறைத்துறை அனுமதி கேட்டு கடிதம் எழுதியுள்ளது.

சிறைகளில் மோதல்கள், கஞ்சா உள்ளிட்ட சட்ட விரோத செயல்களை தடுக்க டிரோன் கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்படும். இந்த டிரோன் கேமராவை பறக்கவிட்டு அதன் மூலம் கண்காணிப்பதன் மூலம் சிறை வளாகத்தில் நடக்கும் அனைத்துக் காட்சிகளையும் துல்லியமாக கண்டுபிடிக்க முடியும். இதன் மூலம் அத்துமீறல்கள் குறைய வாய்ப்பு உள்ளது. அத்துடன் கைதிகள் சில அடாவடி செயல்களில் ஈடுபட்டால் அவற்றை ஆதாரப்பூர்வமாக கண்டு பிடிப்பதன் மூலம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வாய்ப்பு உள்ளது. இதனால் அவர்கள் அதுபோன்ற செயலில் ஈடுபடுவதை தவிர்க்க வாய்ப்பு இருக்கிறது. எனவே விரைவில் டிரோன் கேமரா வாங்கப்பட்டு அதை சிறை வளாகத்தில் பறக்கவிட்டு கண்காணிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதியில்சேலத்தில் இளைஞர் அணி மாநில மாநாடு குறித்தும்,நீட் விலக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகை தந்த இருசக்கர வாகன விழிப்புணர்வு பிரச்சார ஊர்வலத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வரவேற்று அவர்களுடன் செஞ்சி நகரில் ஊர்வலம் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்தினார். உடன்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## மயிலாடுதுறை மாவட்டத்தில் 6,850 பேருக்கு ரூ.51.31 கோடியில்
# நலத்திட்ட உதவிகள்: அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!
## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ - செ.இராமலிங்கம் எம்.பி. பங்கேற்பு!

நாகை, நவ.21-

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை ஏ.வி.சி.திருமண மண்டபத்தில் மயிலாடுதுறை மாவட்ட கூட்டுறவுத்துறை சார்பில் 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நடைபெற்றது.

விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தார். விழாவில் 6,850 உறுப்பினர்களுக்கு ரூ. 51 கோடியே 31 லட்சம் மதிப்பிலான நலதிட்ட உதவிகளை சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கி பேசுகையில் இந்தியாவில் பல்வேறு மாநிலங்கள் இருந்தாலும் தமிழ்நாட்டில் கூட்டுறவு துறை விவசாயிகளுக்காகவும், ஏழை, எளியவர்களுக்காவும், மிக சிறப்பாக செயல்படுகின்ற மாநிலமாக தமிழ்நாடு. 70 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களானது தமிழ்நாட்டில் 2004-2025 ஆண்டுகளில் அப்போது இருந்த ஆடசியாளர்கள் செய்த குளறுபடிகளால் தமிழ்நாட்டில் உள்ள தொடக்க வேளாண்மை திவாலாகி மூடப்பட்டது.

2005 கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கவில்லை. அப்போது கூட்டுறவு சங்கத்தில் பணியாற்றியவர்களுக்கு சம்பளமே எடுக்க முடியாமல் வேலை விட்டு நின்று விட்டார்கள்.

அதன் பின் 2006 ம் ஆண்டு முத்தமிழ் கலைஞர் ஆட்சி வருகிறது. அப்போது முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற உடன் யாரும் செய்யாத மகத்தான சாதனையாக தமிழ்நாட்டில் இருக்கின்ற22 லட்சத்து 40 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 7 ஆயிரம் கோடி ரூபாய் விவசாய கடனை தள்ளுபடி செய்த தலைவர் முத்தமிழ் கலைஞர் அவர்கள் மட்டுமே. கடன் தள்ளுபடி செய்யப்பட்டதால் கூட்டுறவு வங்கிகளில் இருந்து விலை விட்டு சென்றவர்கள் மீண்டும் வேலையில் சேர்ந்தார்கள். மீண்டும் வங்கிகள் செயல்பட தொடங்கியது. ரூ. 7 ஆயிரம் கோடி என்பது தள்ளுபடி என்று அறிவித்ததோடு இல்லாமல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆண்டுக்கு ரூ.1,500 கோடி என்று 5 ஆண்டுகாலம் கூட்டுறவு சங்களுக்கு வழங்கி, யார் எல்லாம் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றவர்களுக்கு வங்கியில் கடன் நிலுவை எல்லை என்ற சான்றிதழும் வாங்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். கடந்த ஆண்டு 2022-2023 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாய கடனாக ரூ.10 ஆயிரம் கோடிக்கும் மேலாக வழங்கி உள்ளார்கள்.

அப்போது ஒன்றியத்தில் ஆட்சியில் இருந்து காங்கிரஸ் கட்சியின் பிரதமராக இருந்து மன்மோகன்சிங் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் தள்ளுபடி செய்ததை முன்உதாரனமாக வைத்து அதன் அடிப்படையில் இந்தியாவில் உள்ள விவசாயிகள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பெற்ற கடன்களை 72 ஆயிரம் கோடி கடனை தள்ளுபடி செய்து விவசாயிகளை காப்பாற்றினார்கள். மக்களுக்கான வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்ற கூடிய அரசாக இன்றைய அரசு உள்ளது. குறிப்பாக தமிழ்நாடு முதலமைச்சராக தளபதி அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் 5 பவுனுக்கு குறைவாக நகைக் கடன் பெற்றுள்ளவர்களின் நகைக்கடன் தள்ளுபடி செய்யப்படும் என் அறிவித்தார்கள்.

அதன்படி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 ஆயிரத்து 13 கோடி மதிப்பிலான நகைக் கடன் தள்ளுபடி செய்து அதன் மூலம் தமிழ்நாட்டில் இருக்கின்ற 13 லட்சத்து 12 ஆயிரம் குடும்பங்கள் பயன் பெற்றார்கள். தமிழ்நாட்டில் 1 லட்சத்து 17 ஆயிரம் மகளிர் சுய உதவிக்குழுவிற்கு ரூ.2ஆயிரத்து 715 கோடி கடனுதவிகளை தள்ளுப்படி செய்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள்.

இதன் மூலம் 15 லட்சத்து 88 ஆயிரம் மகளிர் குழு உறுப்பினர்கள் பயன் பெற்றுள்ளார்கள். மயிலாடுதுறை மாவட்டத்தில் 1217 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.13 கோடியே 70 லட்சம் கடன் தள்ளுப்படி செய்யப்பட்டுள்ளது. இன்றைய தினம் 6 ஆயிரத்து 850 உறுப்பினர்களுக்கு ரூ. 51 கோடியே 31 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த தமிழ்நாடு முதலமைச்சர் ரூ.86 கோடி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கி உள்ளார்கள்.

விவசாயிகளுக்கு உரிய காலத்தில் கடனுதவிகளை வாங்கி அவர்களுக்கு எல்லா வகையிலும் பக்க பலமாக கூட்டுறவு துறை செயல்பட வேண்டும். மயிலாடுதுறை மாவட்டத்திற்கு தேவையான அனைத்து நலத்திட்டங்களையும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்தியாவில் யாரும் செயல்படுத்தாத திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல் படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மூலம் குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ. 1000 வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி 1 கோடியே 13லட்சத்து 84 ஆயிரத்து300 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்பட்டுத்தபட்டுள்ளது. மாதாமாதம் ரூ. 1,000 குடும்பத் தலைவிகளுக்கு வழங்கி அனைத்து தரப்பு மக்களுக்கும் இத் திட்டத்தை கொண்டு சேர்த்துள்ளார்கள். தமிழ்நாட்டில் மக்கள் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சென்று எல்லா நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகிறது. இவ்வாறு சுற்றுசூழல் மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

அதைத் தொடர்ந்து மயிலாடுதுறை மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட கூடிய கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்களை வழங்கியும், கூட்டுறவு வார விழாவை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நடைபெற்ற பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப் பேட்டியில் வெற்றிப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை அமைச்சர் சிவ.வி.மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் ஆகியோர் வழங்கினார்கள்.

விழாவில் மயிலாடுதுறை சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன்,

ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.இளையபெருமாள், மங்கை எம்.சங்கர், ஞான.இமையநாதன், ப.முருகமணி, கு.வைத்திய நாதன், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், ஏ.ஆர்.ராஜா,மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், ஒன்றியக்குழு தலைவர்கள் காமாட்சிமூர்த்தி, ஜெயபிரகாஷ், மகேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் பி.கென்னடி, காந்தி, நத்தம் வின்சென்ட், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் தியாக.விஜயேஸ்வரன், சார்பு அணி இரா.மனோகரன் ராஜ்குமார் மற்றும் சுரேஷ், ரஜினி, முருகன், விவசாய அணி கோபி உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆலவயல் ஊராட்சியில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி மற்றும் செங்கல்பட்டு கற்பக விநாயகா மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரி இணைந்து நடத்திய மாபெரும் இலவச பொது மருத்துவ முகாமை மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை ரகுபதி தலைமையேற்று துவக்கி வைத்தார். மருத்துவர் அணி மாவட்ட அமைப்பாளர் டாக்டர் சுதர்சன், மாவட்ட தலைவர் டாக்டர் சதீஷ் , மாவட்ட துணை அமைப்பாளர் டாக்டர் ராஜசேகரபாண்டியன், மாவட்ட துணைத்தலைவர் டாக்டர் கண்ணன், கனகவேல் ஒன்றியச் செயலாளர்கள் அ.அடைக்கலமணி, அ.முத்து பேரூராட்சி தலைவர் சுந்தரி அழகப்பன், திருமயம் தொகுதி தகவல் தொழில்நுட்ப பிரிவு ஆலவயல் முரளி சுப்பையா, மீனாட்சி மணிகண்டன், அன்னராசு உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஆழித்தேரோடிய திருவாரூரில் “முத்தமிழ்த்தேர்” பவனி!
## பூண்டி கே.கலைவாணன் முன்னிலையில் பொதுமக்கள் வரவேற்றனர்!

திருவாரூர், நவ. 21 -

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் பேருந்து நிலையம், காட்டூர் கலைஞர் கோட்டம், திருவாரூர் பழைய பேருந்துநிலையம் மற்றும் நீடாமங்கலம் ஆகிய பகுதிகளில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, “முத்தமிழ்த்தேர்” என்ற அலங்கார ஊர்தி திருவாரூர் மாவட்டத்திற்கு வருகை தந்ததையொட்டி, மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., முன்னிலையில் வரவேற்று, முத்தமிழ்த்தேரின் உள்ளே அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு கழக நிர்வாகிகளும் பொது மக்களும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ ,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயகுமார், மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் உடனிருந்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, அனைத்து தரப்பு மக்களுக்கும் ஒரு நிலையான பங்களிப்பைத் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு நடத்தப்பட வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 12நூற்றாண்டு விழா குழுக்கள் அமைக்கப்பட்டன. அதில், “எழுத்தாளர்கலைஞர்” குழு, படைப்புலகின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களைப் போற்றும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில் இன்றைய இளம் தலைமுறையினருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முகத் தன்மையினை எடுத்து செல்லும் வகையில், எழுத்தாளர் கலைஞர் குழுவின் மூலம் அவரது புகழ்பாடும் “முத்தமிழ்த்தேர்” அலங்கார ஊர்தி 04.11.2023 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்கி அனைத்து மாவட்டத்திற்கு சென்று கடைசியாக 04.12.2023 அன்று சென்னையில் முடிவடையும். இவ்வாகனம் திருவாரூர் மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளது. இந்த வாகனம் “எழுத்தே எனது மூச்சு, எழுதுவதே எனது தினப்பழக்கம்” என்று முழங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பயன்படுத்திய பேனா வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாகனத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் தமிழ் சமூகத்திற்கு படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும் தமிழ்நாடு முழுவதும் கொண்டு செல்லும் வகையில் “முத்தமிழ்த் தேர்” அலங்கார ஊர்தி அனைத்து மாவட்டங்களிலும் காட்சிப்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

கலைஞர் அவர்களின் அவர்களின் சிறப்புகளை விளக்கும் குறும்படமும் தொடர்ந்து திரையிடும் வகையில் ஒளித்திரையும் அமைக்கப்பட்டுள்ளது. பேனா வடிவிலான இந்த வானகத்தின் பின்புறம் இயந்திரத்தினால் திறந்து மூடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அலங்கார ஊர்தியினை பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் அனைவரும் சென்று பார்வையிடும் வகையில் வாகனத்தின் உள்ளே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோபாலபுர இல்ல உள்அமைப்பு தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் உள்ளே அஞ்சுகம் அம்மாள் அவர்களின் உருவச்சிலையும் அதன் அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருக்கையில் அமர்ந்திருப்பது போன்ற உருவச்சிலையும், அவர் பயன்படுத்திய நூலகத்தின் மாதிரி வடிவமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எழுத்துக்களுக்கு வடிவம் கொடுக்கும் அவரது படைப்புகளும், அவரது பன்முகத் தோற்றத்தினை விளக்கும் ஒலி, ஒளி அமைப்பும் உருவாக்கப்பட்டு காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.

கலைஞர் அவர்களின் எழுத்துகளால் உயிர்ப் பெற்ற கவிதை, கட்டுரை, புதினங்கள், காப்பியங்கள் போன்றவற்றை கைப்பேசி வாயிலாக இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்திற்கு வருகைப்புரிந்த முத்தமிழ் தேரினை பள்ளி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் மலர்தூவி வரவேற்றனர்.

பள்ளி மாணவ, மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. முத்தமிழ் தேரினை 5000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வுகளில் நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், நகர்மன்ற தலைவர் புவனப்பரியா செந்தில், துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர், மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள்,

ஒன்றியக்குழு தலைவர் புலிவலம் ஏ.தேவா, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# ஜம்மு-காஷ்மீரில் துப்பாக்கிச் சண்டை!

குல்காம், நவ.21-

ஜம்மு-காஷ்மீரில் 2வது நாளாக நடைபெற்று வரும் துப்பாக்கி சண்டையில் 5 லஷ்கர்இதொய்பா தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

குல்காம் மாவட்டம் சாம்னு பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது அங்கு பதுங்கியிருந்த தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே துப்பாக்கி சண்டை வெடித்தது. இந்த சண்டை 2வது நாளாக நேற்று முன்தினமும் நீடித்தது. இந்த சண்டையில் இதுவரை 5 லஷ்கர் இதொய்பா தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த வீடு தீப்பிடித்து மளமளவென எரிந்தது. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

மேலும் சில தீவிரவாதிகள் அங்கு பதுங்கியிருந்து கொண்டு தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதற்கு பாதுகாப்புப் படையினரும் பதிலடி கொடுத்து வருவதால், துப்பாக்கி சண்டை தொடர்ந்து நீடிக்கிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கத்திவாக்கம் மிசா இ.வீரராகவன்
### நவம்பர் 21 (2010)



கத்திவாக்கம் பகுதியில் 1959ஆம் ஆண்டு கழகக் கிளையைத் துவக்கி, முதல் கிளைச் செயலாளர் என்ற பெருமையும் பின்னர் நகரக் கழகச் செயலாளராக 35 ஆண்டு காலம் தொடர்ந்து கழகப் பணியாற்றியவர். தொடர்ந்து பொதுக்குழு உறுப்பினராகவும், கத்திவாக்கம் நகராட்சியின் முதல் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசமும் மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு 27 முறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



விழுப்புரம் வருகை புரிந்த இரு சக்கர வாகன பிரச்சாரக் குழுவினரை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வரவேற்று வாழ்த்துரை வழங்கினார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில விவசாய அணிச் செயலாளர் அன்னியூர் சிவா, மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், நகரச் செயலாளர் இரா.சக்கரை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், துணை அமைப்பாளர்கள் எஸ்.அன்பு, ராஜவேல், பாலாஜி, கலைவாணன், பிரேம், தேவேந்திரன் உள்ளிட்ட மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர்க் கழக நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (20.11.2023) நடைபெற்ற விழாவில் திருச்சிராப்பள்ளி சாலை ரோடு மற்றும் கோட்டை ஸ்டேசன் சாலையினை இணைக்கும் ரயில்வே மேம்பாலத்தை திரும்ப கட்டுதல் மற்றும் சாலையினை விரிவாக்கம் செய்யும் வகையில் ரூ.34.10 கோடி மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் டாக்டர் இரா.வைத்திநாதன், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பழனியாண்டி, நகரப் பொறியாளர் சிவபாதம், மாவட்ட ஊராட்சி தலைவர் த.ராஜேந்திரன், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, உதவி ஆணையர்கள், மாநகராட்சி அலுவலர்கள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### பொதுச்செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை!

# கிருஷ்ணகிரியில் முன்னாள் எம்.எல்.ஏ., பி.முருகன் இல்ல மணவிழா!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் நடத்தி வைக்கிறார்

கிருஷ்ணகிரி, நவ.21-

கிருஷ்ணகிரியில் கழகத் தலைவர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.முருகன் மகள் திருமண விழா நடைபெறுகிறது.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட துணை செயலாளரும், வேப்பனபள்ளி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான பி.முருகன் அவர்களது மகள் மருத்துவர் கனிமொழி என்கிற ஜெய்ஸ்ரீ மணமகன் மருத்துவர் நவீன் குமார் ஆகியோரது திருமண விழா வருகிற 23.11.2023 - வியாழக்கிழமை காலை 11 மணி அளவில் கிருஷ்ணகிரி அருகே உள்ள குந்தாரப்பள்ளி குமரன் மஹாலில் கழக தலைவவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த திருமண நிகழ்ச்சிக்கு கழக பொதுச் செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன்,

கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்ற உள்ளார்கள்.

தமிழக அமைச்சர் பெருமக்கள் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர்கள், தலைமை கழக செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள்,

கிருஷ்ணகிரி மேற்கு, கிழக்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணி களின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,

கழக நிர்வாகிகள், ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! அன்னவாசலில்

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் மாபெரும் மருத்துவ முகாம்!

## கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! எஸ்.ஆர். அண்ணாமலை - மு.க.முத்துக்கருப்பன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, நவ.21-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவ அணி மற்றும் கற்பக விநாயகா மருத்துவக் கல்லூரி, பல் மருத்துவக் கல்லூரி சார்பில் மாபெரும் மருத்துவ முகாம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையிலும், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் மருத்துவர் எஸ்.ஆர்.அண்ணாமலை முன்னிலையிலும், புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசலில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் மு.க.முத்துக் கருப்பன் ஏற்பாட்டிலும் அன்னவாசலில் கோசிலா மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.

இதில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, குழந்தை நல மருத்துவம், மகப்பேறு மற்றும் பெண்கள் நல மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு தொண்டை மருத்துவம், சர்க்கரை நோய் சிகிச்சை, எலும்பு மூட்டு, முதுகு தண்டுவட மருத்துவம், தோல்நோய், மருத்துவம், சிறுநீரக நோய் மருத்துவம், இருதய நோய், மூளை நரம்பியல், குடல், கல்லீரல், கணையம் உள்ளிட்ட நோய்களுக்கு மருத்துவம் செய்யப்பட்டது.

மேலும் பல் சுத்தம் செய்தல், சொத்தைப்பல் அடைத்தல், பல் செட்டு கட்டுதல் போன்ற சிகிச்சைகள் செய்யப்பட்டன. மேலும் இ.சி.ஜி., சுருள் படம் எக்கோ ஸ்கேன், அனைத்து விதமான ரத்தம் மற்றும் சிறுநீரக பரிசோதனைகள் யூ.எஸ்.ஜி. எக்ஸ்ரே, பிசியோதெரபி போன்றவைகள் எடுக்கப்பட்டன.

மருத்துவ முகாமில் 1000க்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்துகொண்டு சிகிச்சை பெற்றனர்.

இந்நிகழ்வுகளில் அன்னவாசல் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.எஸ்.சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் எம்.செந்தில்குமார், அன்னவாசல் பேரூர்ச் செயலாளர் முகம்மது ரிஷா, பொன்.பாரிவள்ளல், கே.எஸ்.ச.இளையசூரியன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், டாக்டர்கள் அமானுல்லா, தவ.பா.உதயசூரியன், எஸ்.வி.ஆர்.அர்வின் ராஜா, வழக்கறிஞர் உஷா ராணி, சண்முகம், அன்னவாசல் சின்னத்துரை, சண்முகம், மகேஷ், அற்புத ஹென்றி மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கடலூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில்

# தென்னிந்திய அளவிலான கபடி - கால்பந்துப் போட்டி!

## அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், நவ.21

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் தென்னிந்திய அளவிலான ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்துகொள்ளும் மாபெரும் கபடி மற்றும் கால்பந்து போட்டி நடைபெறுகிறது என்று மாவட்டச் செயலாளர், அமைச்சர் சி.வெ.கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின்நூற்றாண்டை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் தென்னிந்திய அளவிலான ஆண்கள் மற்றும் பெண்கள் என தனித்தனியே பங்குபெறும் மாபெரும் கபடி மற்றும் கால்பந்து போட்டிகள் வரும் (24.11.2023) முதல் (26.11.2023) வரை நெய்வேலி சூப்பர்பஜார் பின்புறம் நடைபெறுகிறது.



இப்போட்டியில் வெளி மாநிலங்களில் இருந்தும், வெளி மாவட்டங்களில் இருந்தும் கடலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களில் இருந்தும் விளையாட்டு வீரர்கள், இளைஞர்கள் கலந்து கொள்கின்றனர்.

அது சமயம் மாவட்ட கழக நிர்வாகிகள் சட்டமன்ற இந்நாள் - முன்னாள் உறுப்பினர்கள் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழகச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள் மற்றும் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தொ.மு. ச. நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டு நிகழ்ச்சி சிறப்பிக்க அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஈரோடு மாவட்டத்தில் இன்று - பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகைதரும்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## அமைச்சர் சு.முத்துசாமி – என்.நல்லசிவம் அறிக்கை!

ஈரோடு, நவ. 21 -

ஈரோடு மாவட்டத்தில் இன்று - பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது என ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்கள் சு.முத்துசாமி, என்.நல்லசிவம் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஈரோடு வடக்கு - தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் பெருந்துறை





சரளையில் இன்று (21.11.2023 - செவ்வாய்க் கிழமை ) 2500 கழக மூத்த முன்னோடி களுக்கு பொற்கிழி வழங்குதல், இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம், பெருந்துறை சிப்காட் வளாகத்தில் அரசு நிகழ்ச்சி ஆகிய நிகழ்வுகளில் கலந்து கொள்ள வருகை தரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் எனவும்,

மேலும் மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், செயல்வீரர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு ஈரோடு வடக்கு - தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் சு.முத்துசாமி, என்.நல்லசிவம் ஆகியோர் தங்களது அறிக்கையில் கூறியுள்ளனர்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

# ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்!

## மத்திய மாவட்டக் கழகத்தினருக்கு இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சேலம், நவ. 21-

சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



நம் உயிரனைய கழகத் தலைவர் அவர்கள் நெல்லையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற முதல் இளைஞர் அணியின் பிரம்மாண்ட மாநாட்டினை தலைமையேற்று நடத்தி தலைவர் கலைஞர் அவர்களின் பாராட்டினையும், இனமான பேராசிரியர் அவர்களின் வாழ்த்துகளையும் பெற்றார்கள். பதினைந்து ஆண்டுகளுக்கு பிறகு 2023ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் நாள் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டினை நம் இளம் தலைவர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடத்துவது என கழக தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டினை வெற்றிகரமாக இந்திய துணைக்கண்டமே வியந்து பாராட்டுகிற அளவிற்கு நடத்திட தமிழ்நாடு முழுவதும் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சுற்றுப் பயணம் செய்து இளைஞர்களுக்கு எழுச்சியூட்டி வருகிறார்.

அதன் அடிப்படையில் சேலம் மாவட்டத்தில் உள்ள இளைஞர் அணி தோழர்களை நாளை (22.11.2023 - புதன்கிழமை) காலை 09.00 மணிக்கு நேரில் சந்தித்து எழுச்சியுரையாற்றிட உள்ளார்கள். இந்த மாபெரும் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் 30 ஆயிரம் பேர் கலந்து கொள்கிறார்கள். சேலம் மத்திய மாவட்டத்தில் உள்ள கழக இளைஞர் அணி தோழர்கள் வெட்டிவா என்றால் கட்டி எடுத்துக் கொண்டு வரும் ஆற்றல் பெற்றவர்கள்.

ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தின் இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் சீலநாய்க்கன்பட்டி - ஆத்தூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் தாளமுத்து நடராஜன் அவர்களின் இல்லத்தினையொட்டி அமைந்துள்ள மதன்லால் திடலில் மிக பிரம்மாண்டமான பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. இந்த திடலுக்கு கழக இளைஞர் அணி தோழர்கள் காலை சரியாக 09.00 மணிக்கு அலைகடலென ஆர்ப்பரித்து நம் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உரை கேட்க திரண்டிட வேண்டும்.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஒன்றியக் கழக, பகுதிக் கழக, பேரூர்க் கழகச் செயலாளர்கள் ஒவ்வொரு பகுதிக்கும், ஒன்றியத்திற்கும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள பொறுப்பாளர்கள் மற்றும் இளைஞர் அணியின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி தோழர்கள் இதற்கான ஏற்பாடுகளை செய்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கழக இளைஞரணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநில உரிமை மீட்பு இரண்டாவது மாநில மாநாட்டிற்கான இரு சக்கர வாகன பேரணி திருவெறும்பூர் தொகுதி வருகை புரிந்ததையொட்டி அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இளைஞர்களை வரவேற்று திருவெறும்பூர் தொகுதிக்கான பிரசாரத்தை திருச்சி அரியமங்கலம் பால்பண்ணை ரவுண்டானா அருகில் இருந்து கொடியசைத்து தொடங்கி வைத்து பால்பண்ணை முதல் காட்டூர் தந்தை பெரியார் சிலை வரை இருசக்கர வாகனத்தை ஓட்ட பின் தொடர்ந்த வாகன பேரணி. இந்நிகழ்வில் மாநகர கழகச் செயலாளர் மு.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சேகரன், பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், தர்மராஜ், விஜயகுமார், சிவா, ஒன்றியச் செயலாளர்கள் கே.எஸ்.எம்.கருணாநிதி, கங்காதரன், பேரூர்ச் செயலாளர் தங்கவேலு மற்றும் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கலைஞர் இயக்கவியல்: எழுத்துக் கலைஞர்!

■ நீரை.மகேந்திரன்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த நாட்களில், தமிழ்நாடு அரசு அறிவித்த எழுத்தாளர் கலைஞர் குழு சார்பில், முத்தமிழ் தேர் தமிழ்நாடு முழுவதும் வலம் வந்து கொண்டிருக்கிறது.

கலைஞரின் எழுத்துலகப் பயணங்களைப் பெருமைப்படுத்தும் அந்தத் தேர்ப் பயணம் தொடர்பாக சமீபத்தில், அந்தக் குழுவில் இடம் பெற்றுள்ள, சிந்துவெளி ஆய்வாளரும், ஓய்வுபெற்ற ஆட்சிப்பணி அதிகாரியுமான ஆர். பாலகிருஷ்ணன் அவர்களோடு ஒரு உரையாடல் நிகழ்ந்தது.

“உலக அளவில் கலைஞரைப் போல ஒரு எழுத்தாளர் முழுநேர அரசியல்வாதியாக இருந்ததைக் கவனிக்க முடியவில்லை. அல்லது ஒரு அரசியல்வாதி முழுநேர எழுத்தாளராகவும் இருக்கவில்லை” என்றார். அதை ஒப்புநோக்கும் வகையில், உலக அளவிலான பல தரவுகளையும் குறிப்பிட்டார்.

## முழுமையான அரசியல்வாதி, முழுமையான எழுத்தாளர்

வின்சன்ட் சர்ச்சில், பெட்ரண்ட் ரஸ்ஸல் என பல அரசியல்வாதி எழுத்தாளர்கள் தொடர்ச்சியாக இயங்கியவர்கள் இல்லை. கம்யூனிச தத்துவத்தை உலகுக்கு அளித்த மாமேதை கார்ல் மார்க்ஸ், அந்தத் தத்துவத்தை ருஷ்யாவில் அதிகாரத்துக்குக் கொண்டு வந்த ருஷ்யப் புரட்சி நாயகன் விளாதிமிர் லெனின் ஆகியோருக்குப் பின்னர், முழுமையான அரசியல்வாதியாகவும், முழுமையான எழுத்தாளராகவும் விளங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

சமூக ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த இந்திய சூழலில், தவிர நமது ஜனநாயக அமைப்பு முறையில் அரசியல்வாதியாக, ஆட்சி அதிகார நிர்வாகியாகச் செயல்பட்டுக்கொண்டே எழுத்துப் பணியையும் தொடர் செயல்பாடாகக் கொண்டிருந்தவர் கலைஞர் மட்டுமே. பண்டித ஜவஹர்லால் நேரு, மகாத்மா காந்தி ஆகியோர் அரசியல் செயல்பாடுகளைக் கொண்டிருந்தாலும் தொடர்ச்சியாக, தீவிரமாக எழுதியவர்கள் இல்லை.

திராவிடப் பேராசான்கள் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் தொடர்ச்சியாகப் பேசியவை, எழுதியவை இருந்தாலும் கலை, இலக்கிய, திரைத்துறைச் செயல்களில் கலைஞரின் பங்கு தனித்துத் தெரியக்கூடியது. அவரது பேனா அந்தக் கலையில் புதியவற்றைத் தொட்டுள்ளது.

## ஒப்புவமை இல்லாத பயணம்!

கலைஞருக்குப் பிறகான சூழலிலும் அரசியல்வாதிகளாக உள்ளோர் எழுத்துப் பணி என்பது பகுதிநேர அல்லது பத்தி எழுதுபவர்கள் என்கிற அளவிலேயே உள்ளனர். இந்த அளவீடுகள் படி காங்கிரஸ் மூத்த தலைவர்கள் ப.சிதம்பரம், சசி தரூர் ஆகியோர் எழுத்துக்களைக் கவனிக்கலாம்.

இந்த அளவுகள் எதுவுமே கலைஞரோடு பொருத்த முடியாத நிலையைப் பார்க்கலாம். நான் சொல்வது காலச் சூழலோடு மட்டுமல்ல, வயது, அனுபவங்கள் மட்டுமல்ல. கள அனுபவங்களுடன், கலை இலக்கியச் செயல்பாடுகளுடன் அரசியல் நோக்கிலான எழுத்துகளை, கலைஞரிடம் எல்லை வரையறைகள் இல்லாமல் நீள்வதைப் பார்க்கலாம்.

கலைஞர் தனது இளமைக் காலத்தில் இருந்தே எழுதிய வேகம், சினிமா எழுத்துகளில் உச்சம் கொண்டிருந்த நேரத்தில் எழுதியவற்றை அவர் எழுத்து காலத்தின் முதற்பாகமாகக் கொண்டால், இரண்டாவது ஆட்சி காலத்துப் பிறகும் மூன்றாவது ஆட்சி காலத்துக்குமான இடையில் கிடைத்த





காலத்தில் எழுதியவை, அவரது எழுத்துலகின் இரண்டாம் பாகமாகக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் எழுதியவை மூன்றாம் பாகமெனக் கொள்ளக்கூடியவை.

அதாவது, 1977–ஆம் ஆண்டுக்கும் 1989–ஆம் ஆண்டுக்கும் இடையிலான காலத்தில் அவரை இயக்கியவை கழகச் செயல்பாடுகள் மட்டுமல்ல, கலை இலக்கியச் செயல்பாடுகளும்தான். குறிப்பாக கலைஞர் இயக்கவியல் என்கிற கடந்த இரண்டு கட்டுரைகள் பேசிய காலத்தில், அவர் எழுதியவையும் அதிகம்.

## நேரத்தைக் கையாண்ட நிதானம்!

“1976–ஆம் ஆண்டு, தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பின்னர், எதிர்க்கட்சியாகப் பணியாற்றிய நிலையில் ஓய்வான நேரத்தில் திரைப்படத் துறையிலும் மீண்டும் சற்றுக் கவனம் செலுத்திட நேரம் கிடைத்தது” எனத் திரைப்படத் துறை தொடர்பான குறிப்பு ஒன்றில் குறிப்பிடுகிறார்.

கலைஞர் தனது காலத்தை எவ்வளவு நிதானமாக எதிர் கொண்டார் என்பதற்கு மிகப் பொருத்தமான உதாரணமாக **‘கலைஞரின் கவிதைகள்’** தொகுப்பினைக் குறிப்பிடலாம். 1976–ஆம் ஆண்டு நெருக்கடியை சந்தித்து, 1977–ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்த நிலையில், ஒரு படைத்தலைவன் இழப்புகளுக்குப் பின்னர், தவறுகளை ஆய்வு செய்யக்கூடிய அந்தக் கணத்தில், கலைஞரோ ‘கலைஞரின் கவிதைகள்’ தொகுப்பினைக் கொண்டு வந்துள்ளார். 1977–ஆம் ஆண்டுப் பாரதி பதிப்பகம் கலைஞரின் கவிதைகள் தொகுப்பினைக் கொண்டு வந்துள்ளது.

> **அவர் தனிப்பட்ட முறையில் இயங்கியது மட்டுமல்ல, கலை இலக்கிய ரீதியான பண்பாட்டு அசைவுகளையும் தமிழ்நாட்டில் உருவாக்கியதில் குறிப்பிடத்தக்க பாகம் வகிக்கிறார்.**

## இயங்கிக் கொண்டிருந்த பேனா!

அந்த 13 ஆண்டு காலத்தில் ‘வண்டிக்காரன் மகன், ‘நெஞ்சுக்கு நீதி, ‘காலம் பதில் சொல்லும், ‘மாடி வீட்டு ஏழை, ‘தூக்கு மேடை, ‘பாலைவன ரோஜாக்கள், ‘பாடாத தேனீக்கள், ‘தென்றல் சுடும், ‘நியாயத்தராசு, ‘பொறுத்தது போதும், ‘பாச மழை, ‘காவலுக்குக் கெட்டிக்காரன், ‘வீரன் வேலுத்தம்பி எனப் பல திரைப்படங்கள் தொடர்ச்சியாக, அவர் எழுத்துக்களில் வந்துள்ளன

இந்தக் காலகட்டத்தில் முரசொலியில் தொடர்ச்சியாக உடன்பிறப்புக் கடிதங்கள் எழுதுகிறார். 1980–ஆம் ஆண்டிலிருந்து 1989–ஆம் ஆண்டு வரையில் மாதத்துக்குச் சராசரியாக 10 கடிதங்கள் எழுதியுள்ளார்.

1978–ஆம் ஆண்டு அரும்பு, வான்கோழி, பரதாயணம், 1979–இல் ஒரு மரம் பூத்தது, புனித ராஜ்ஜியம், நரன் மணிமாலை, 1981–இல் பேசும் கலை வளர்ப்போம், 1982–ஆம் ஆண்டு முடியாத தொடர்கதை, வைரமணிகள், 1983 -இல் தென்பாண்டிச் சிங்கம், 1985 -இல் இந்தியா? இந்தியாவா?, 1987–இல் சங்கத்தமிழ்,1988–இல் பொன்னர் சங்கர் எனத் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கிறார். அதற்கிடையே நெஞ்சுக்கு நீதி உள்ளிட்ட தொடர்கள்.

இந்தக் காலத்தில் இலக்கிய நிகழ்வுகளும், இலக்கிய மேடைகளும் மிக அதிக அளவில் கலந்து கொண்டிருக்கிறார். சற்றேறக்குறைய கவியரங்க நிகழ்வுகள் உச்சம் பெற்ற காலம் என அவற்றைச் சொல்லலாம். அதாவது அவர் தனிப்பட்ட முறையில் இயங்கியது மட்டுமல்ல, கலை இலக்கிய ரீதியான பண்பாட்டு அசைவுகளையும் தமிழ்நாட்டில் உருவாக்கியதில் குறிப்பிடத்தக்க பாகம் வகிக்கிறார்.

சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்கள், உள்ளாட்சித் தேர்தல்கள், கழகத்தின் முப்பெரும் விழாக்கள், மாநாடுகள், மக்கள் பிரச்சினைகளுக்கான போராட்டங்கள், சிறை, கொள்கைப் பயணங்கள், தொண்டர்களின் சந்திப்புகள் என ஒவ்வொரு நாளும் தொடர் செயல்பாடுகளினூடே அவரது பேனாவும் சகப் பயணியாக இயங்கிக் கொண்டே இருந்துள்ளது.

## ஓய்வே எடுக்காத உழைப்பு

“ஓய்வெடுத்துக் கொள்க” என்று சில நண்பர்கள் கூறினர். ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான் என்று என் கல்லறையின் மீதுதான் எழுதப்படும்” என்று பதில் சொன்னேன்” என 1985–ஆம் ஆண்டு ‘நெஞ்சுக்கு நீதி’ என்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார். கலைஞரின் அந்தக் கூற்றுதான், அவரை இன்னும் நூறு ஆண்டுகளுக்கும் ஒரு இயக்கத்தை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கான சான்றாக நாம் பார்க்க முடியும். ஆனால் ஒன்று, “இதோ ஓய்வு கொண்டிருக்கிறான் என, என் கல்லறையின் மீதுதான் எழுதப்படும்” என்று கலைஞரே குறிப்பிட்டிருந்தாலும், அவர் இன்னமும் ஓய்வெடுக்கவில்லை, இயங்கிக் கொண்டேதான் இருக்கிறார். அவரைப் பற்றி எழுதுவதற்கும், பேசுவதற்கும், கொண்டாடுவதற்கும், கொள்கைப் பாய்ச்சல் நிகழ்த்துவதற்கும் அவரது இயக்கமே நமக்குக் கைகொடுக்கும்.

---

## திராவிட இயக்க இதழ்கள் - ‘கிளர்ச்சி’




“திராவிட இயக்க வரலாற்றிலே ‘கிளர்ச்சி’யையும் அதன் ஆசிரியர் தோழர் தங்கப்பழம் அவர்களையும் எளிதில் மறந்துவிட முடியாது. வீண் வம்பும், வீராப்பும் செய்து இயக்கத்துடன் மோதிய மாற்றுக் கட்சி இதழ்கள், அவர் தொடுத்தக் கணையினால் கருகிய செய்தி மறக்கக் கூடியது அல்ல.

தூத்துக்குடி சதி வழக்கினால், சென்ற 317 நாட்களாக சிறையினுள் தள்ளப்பட்டு ஜாமீனில் வெளி வந்திருக்கும் ஆசிரியரின் நேர் பார்வையில் 15/8/54 முதல், அதிகப் பக்கங்களுடன் புதுமைக் கருத்துக்கள், கிண்டல் சித்திரங்களோடு வெளி வருகிறது.”

இப்படி ஒரு விளம்பரம் 20/8/54 தேதியிட்ட ‘முரசொலி’ வார இதழில் வெளிவந்துள்ளது. மேற்கூறிய சிறப்புகளுக்குரிய ‘கிளர்ச்சி’, அன்றைய திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி நகரிலிருந்து திராவிடர் இயக்க வார இதழாக வெளிவந்து, பிறகு மாதம் இருமுறை இதழானது. இதன் ஆசிரியர்களாக இராசு.தங்கப்பழம், எம்.எஸ். சிவசாமி என்ற இரட்டையர்கள் இருந்தனர்.

‘விபூதி வீரமுத்து’ என்பவர் நடத்திய ‘அறப்போர்’ என்ற காங்கிரஸ் பத்திரிகைக்கு, ‘கிளர்ச்சி’ இதழ் இரட்டையர்கள் காரசாரமாகப் பதில் எழுதியதாக, ‘இதழியல் கலை: அன்றும் இன்றும்’ நூல் குறிப்பிடுகிறது.

## ஃப்ளாஷ்பேக்



## தொண்டர் இல்லத்தில் உணவு!

தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் 1992–ஆம் ஆண்டு நடந்த பொதுக்கூட்டத்துக்கு அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய தமிழ்நாடு முதலமைச்சருமான தலைவர் தளபதி அவர்கள் வருகை தந்தார். காலையில் பொதுக் கூட்டங்களை எல்லாம் முடித்துக் கொண்டு மாலை வேளையில், எங்களது இல்லத்தில் உணவருந்திய போது இந்தப் படம் எடுக்கப்பட்டது. அப்போது நகர இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த எனது தந்தை க.சாகுல் அவர்கள் இந்த நிகழ்வைப் பல தருணங்களில் எங்களிடம் பெருமை பொங்கக் கூறியுள்ளார்.



முகமது பாசில் ஷாகுல்

**-முகமது பாசில் ஷாகுல், போடி நகரம்.**

இது போன்ற அரிய புகைப்படங் களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### இளைஞர் அணி உதயம்!

**1980 - ஆம் ஆண்டு ஜூலை மாதம் இருபதாம் தேதி மதுரை ஜான்சி ராணி பூங்கா திடலில் கழகத்தின் இளைஞர் அணி தொடக்க விழா நடைபெற்றது. அதைத் தொடர்ந்து, 1982–ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற இரண்டாம் ஆண்டு விழாவில், இளைஞர் அணியின் மாநில அமைப்பாளராக, இன்றைய கழகத் தலைவரை அறிவித்தார் கலைஞர் .**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 306




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131


நாள் : 21 – 11 – 2023, செவ்வாய்கிழமை
இடம் : பொம்மைக்குட்டை மேடு, நாமக்கல்
ஒருங்கிணைந்த நாமக்கல்
மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி
செயல்வீரர்கள் கூட்டத்திற்கு
வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக.. வருக...
கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் M.Com., D.C.M., M.P.
மாவட்டக் கழகச் செயலாளர் / பாராளுமன்ற உறுப்பினர் ( மாநிலங்களவை )
மாண்புமிகு. Dr.மா.மதிவேந்தன்
வனத்துறை அமைச்சர்
S.M.மதுரா செந்தில் B.A.,
நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்
P.ராமலிங்கம் M.L.A.
நாமக்கல் சட்டமன்றத் தொகுதி
K.பொன்னுசாமி M.L.A.
சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி
அன்புடன் வரவேற்கும்... பார் இளங்கோவன் B.A.,B.L.,D.P.M.
நாமக்கல் மாவட்ட முன்னாள் பொறுப்பாளர் / கழக தீர்மானக்குழுச் செயலாளர்



நாள் : 21 – 11 – 2023, செவ்வாய்கிழமை
இடம் : பொம்மைக்குட்டை மேடு, நாமக்கல்
நாமக்கல் கிழக்கு - மேற்கு
மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி
செயல்வீரர்கள் கூட்டத்திற்கு
வருகை தரும்
இளைய சமுதாயத்தின்
அடையாளம் - உயிர்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் (ம) விளையாட்டு
மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை வருக.. வருக...
கலைஞர் 100
1924 - 2023
சொல்லாலும்,
செயலாலும்
உம்மை வெல்ல
எவருமில்லை!
கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் M.Com., D.C.M., M.P.
மாவட்டக் கழகச் செயலாளர் / பாராளுமன்ற உறுப்பினர் ( மாநிலங்களவை )
மாண்புமிகு
Dr.மா.மதிவேந்தன்
வனத்துறை அமைச்சர்
கழக ஆதிதிராவிடர் நலக்குழு துணைத் தலைவர்
K.பொன்னுசாமி M.L.A.
மாவட்ட துணைச் செயலாளர் / சேந்தமங்கலம் தொகுதி
P.ராமலிங்கம் M.L.A.
நாமக்கல் தொகுதி
சி.ஆனந்தகுமார்
கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்
என்றும் உங்கள் வழியில்...
சி.விஸ்வநாத் B.E., L.L.B.,
மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
Jayam Arts
மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்
வ.இளம்பரிதி
இரா.பிரபாகரன்
மா.கார்த்திக்
ம.ரமேஷ்குமார்
ரா.கலைவாணன்
நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி




கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கவும்,
இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்திற்கு தலைமையேற்கவும்,
ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தரும்
கழக இளைஞரணி செயலாளர், இளைஞர்களின் எழுச்சி நாயகன்,
இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை வருக! வருக!! என இருகரம் கூப்பி அன்புடன் வரவேற்கும்.,
மாண்புமிகு. அந்தியூர் ப.செல்வராஜ் M.P அவர்கள்
கழக துணைப் பொதுச் செயலாளர்
மாண்புமிகு. சு.முத்துசாமி அவர்கள்
வீட்டுவசதி,மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்
திருமிகு. என்.நல்லசிவம் அவர்கள்
ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர்
திரு. A.C.வெங்கடாசலம் அவர்கள்
அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர்
இடம் : சரளை, பெருந்துறை நாள் : 21.11.2023
கந்தவேல்
என்றும் திராவிட பாதையில்,
எம்.சிவபாலன்
T.N.பாளையம் ஒன்றிய கழக செயலாளர்
T.N.பாளையம் ஒன்றிய திமுக
ஈரோடு வடக்கு மாவட்டம்



கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க உடன்பிறப்புகளாய் இணைவோம் திட்டத்தின் கீழ் கழக உறுப்பினர்களாக பதிவு செய்தவர்களுக்கு புதிய உறுப்பினர் அட்டை வழங்கும் பணியினை சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் ஆத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளர் டாக்டர்.வே.செழியனிடம் வழங்கினார். மேலும் கிழக்கு மாவட்டத்தில் முதல் கட்டமாக 38, 627 புதிய உறுப்பினர்களுக்கு அட்டை வழங்கும் பணி தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக அவைத்தலைவர் கருணாநிதி, மாவட்ட துணைச் செயலாளர் சின்னதுரை, ஒன்றிய கழகச் செயலாளர்கள் மாதேஸ்வரன், மூர்த்தி, மருதமுத்து, சிவராமன், பேரூர் கழக செயலாளர்கள் வெங்கடேசன், சுப்ரமணி,பாபு (எ) வெங்கடேஷ், பாலமுருகன் , மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சேகர், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ப்ரண்ட்ஸ் ரமேஷ், மாநில பொதுக்குழு உறுப்பினர் சோமசுந்தரம் மற்றும் கழக முன்னோடிகள் வீராசாமி, நடராஜ், ரஜினி, சுரேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தஞ்சை மாவட்டம், புன்னைநல்லூர் மாரியம்மன் கோவில் அருகில் வருகை தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழ்பாடும் முத்தமிழ்த்தேரினை வரவேற்று, தேரில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சியர் தீபக் ஜேக்கப் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், செ. இராமலிங்கம், தஞ்சை மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர்கள் சு.ப.தமிழழகன் (கும்பகோணம்), மரு.அஞ்சுகம் பூபதி, (தஞ்சாவூர்) உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

### நா.புகழேந்தி எம்.எல்.ஏ. தலைமை! டாக்டர் பொன்கௌதமசிகாமணி எம்.பி. முன்னிலை!

# விழுப்புரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் க.பொன்முடி - பா.அப்துல்மாலிக் சிறப்புரை! செ.தினகரன் அறிவிப்பு!

விழுப்புரம், நவ. 21-

விழுப்புரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ தலைமையில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன் கௌதமசிகாமணி முன்னிலையில் நடைபெறுகிறது. இதில் உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் இளைஞர் அணி மண்டல பொறுப்பாளர் பா.அப்துல் மாலிக் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள் என்று மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

விழுப்புரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம். எல். ஏ தலைமையில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன் கௌதமசிகாமணி முன்னிலையில் நாளை (22.11.2023 - புதன்கிழமை) மாலை 3.00 மணியளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் இளைஞர் அணி மண்டல பொறுப்பாளர் பா. அப்துல் மாலிக் ஆகியோர் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்கள்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ். அன்பு, டி.டி. ஜெ. ராஜவேல், எஸ். பாலாஜி, பா. கலைவாணன், ஏ.சி.கே. பிரேம், ஏ.கே. தேவேந்திரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இக்கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:**

நவம்பர் 27 கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா.

தி.மு.க. சேலம் மாநில இளைஞரணி மாநாடு.

இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விழுப்புரம் வருகை

நீட் கையெழுத்து இயக்கம்.

இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.

### உத்தரகாண்ட் சுரங்கப்பாதையில் சிக்கியுள்ள

# தொழிலாளர்கள் விரைவில் மீட்கப்படுவர்!

## மீட்புக்குழு தகவல்!

டேராடூன், நவ. 21 -

உத்தரகாண்ட் மாநிலம் உத்தரகாசியில் பிரம்மகால் யமுனோத்ரி தேசிய நெடுஞ்சாலையில் சில்க்யாரா, தண்டல்கான் பகுதிகளுக்கு இடையே சுரங்கப்பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அந்தப் பாதையின் ஒரு பகுதியில் கடந்த 12ம் தேதி மண் சரிந்து விபத்து ஏற்பட்டது.

அதில் 41 தொழிலாளர்கள் சுரங்கத்தின் நடுவில் சிக்கிக் கொண்டுள்ளனர். அவர்களை மீட்கும் முயற்சியில் மத்திய, மாநில அரசுகள் மற்றும் பேரிடர் மீட்புக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

சுரங்கத்தின் உள்ளே சிக்கியுள்ள தொழிலாளர்களுக்கு குழாய் மூலம் ஆக்சிஜன் செலுத்தப்பட்டு வருகிறது. மற்றொரு குழாய் வழியாக அவர்களுக்கு திரவ உணவும் அனுப்பப்பட்டு வருகிறது.இந்நிலையில், மீட்புப் பணிகளை விரைவுபடுத்த ம.பி. மாநிலம் இந்தூரிலிருந்து விமானப் படையின் சி17 விமானம் மூலமாக ஏற்கனவே மற்றொரு துளையிடும் இயந்திரமும் சில்க்யாரா பகுதிக்கு கொண்டு வரப்பட்டது. துளையிட்டுக் கொண்டிருந்த நிலையில் இயந்திரத்தில் சத்தம் வந்ததால் துளையிடும் பணி நிறுத்தப்பட்டது. மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் மீட்புப் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக பிரதமரின் முன்னாள் ஆலோசகர் பாஸ்கர் குல்பே வந்துள்ளார்.

அவர் கூறும்போது, மத்திய பிரதேசத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட இயந்திரம் மூலம் செங்குத்தாக துளையிடும் பணி நடைபெற்று வருகிறது.

தொழிலாளர்களை மீட்க ஒரு திட்டம் மட்டுமல்லாமல் வேறு சில திட்டங்களையும் செயல்படுத்த நாங்கள் ஆலோசித்து வருகிறோம். மீட்புப் படையினரின் ஒருங்கிணைந்த முயற்சியால் தொழிலாளர்கள் விரைவில் மீட்கப்படுவார்கள் என்றார்.

சுரங்கப்பாதையில் சிக்கி உள்ளவர்களின் உடல்நிலை மோசமடைவதற்கு முன்பு அவர்களை விரைவில் மீட்க வேண்டும் என்று தொழிலாளர்களில் ஒருவரின் சகோதரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# டெல்லியில் காற்றின் தரம் தொடர்ந்து மோசம்!

புதுடெல்லி, நவ. 21 -

தலைநகர் டெல்லியில் குளிர்காலம் தொடங்கியது முதலே காற்று மாசு அதிகரித்து காணப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் காற்றின் தரம் இப்படித்தான் மோசமடையும் இந்த நிலையில் டெல்லி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நிலவி வரும் மோசமான புகை மூட்டத்தால் மக்கள் சுவாசிக்க முடியாத நிலையில் இருந்தனர். டெல்லியில் காற்றின் தர குறியீடு 300 புள்ளிகளை தாண்டி இருந்தது.

இது மிகவும் மோசமான பாதிப்பு ஆகும். இதனால் கடந்த 9 ஆம் தேதி முதல் டெல்லியில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் டெல்லியில் காற்று மாசு சற்று குறைந்துள்ளதால் நேற்று முதல் அனைத்து அரசு , அரசு உதவிப்பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் செயல்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் (CPCB) தகவலின் படி, தேசிய தலைநகரில் காற்றின் தரக் குறியீடு (310) 'மிகவும் மோசமான' பிரிவில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காற்றின் தரம் 50 க்கு கீழ் இருந்தால் நல்லது. 51 முதல் 100 வரை இருந்தால் திருப்தி, 101 முதல் 200 க்கு இடையே இருந்தால் அது மிதமானது. 201 முதல் 300 இடையே இருந்தால் அது மோசமானது, 301 மற்றும் 400 இடையே இருந்தால் மிக மோசமானது என வகைப்படுத்தப்பட்டுள்ளது.






21 – 11 – 2023, செவ்வாய்கிழமை
தி.மு.க. இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்
மற்றும் கழக மூத்த முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கும் விழாவிற்கு வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
இளைஞர் நலன் (ம) விளையாட்டு
மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
உதயநிதி
ஸ்டாலின்
அவர்களே வருக.. வருக...
மாண்புமிகு சு.முத்துசாமி
வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
ஈரோடு தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்
என்.நல்லசிவம்
ஈரோடு வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்
K.E.பிரகாஷ் B.A.,
துணைச் செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி
P.S.சீனிவாசன்
துணைச் செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி
வரவேற்று மகிழும்... ஏ.திருவேங்கடம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் :
கே.சையத் நாஸிர் அஹமத் ❖ செ.கார்த்திகேயன்
வி.வைத்தீஸ்வரன் ❖ சன் சுரேஷ் (எ) பி.ஜி.சுரேஷ்குமார்
கே.ஜி.வினோத்குமார் ❖ கே.எஸ்.பிரகாஷ்
ஈரோடு வடக்கு மாவட்ட
தி.மு.க. இளைஞர் அணி




21 – 11 – 2023,
செவ்வாய்கிழமை
MASSIVE
YOUNG LEADER
தி.மு.க. இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்
மற்றும் கழக மூத்த முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கும் விழாவிற்கு வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
உதயநிதி
ஸ்டாலின்
அவர்களே வருக... வருக...
மாண்புமிகு சு.முத்துசாமி
வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
ஈரோடு தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்
என்.நல்லசிவம்
ஈரோடு வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்
மு.சுப்பிரமணி
மாநகரக் கழகச் செயலாளர்
K.E.பிரகாஷ் B.A.,
துணைச் செயலாளர் தி.மு.க. இளைஞர் அணி
P.S.சீனிவாசன்
துணைச் செயலாளர் - தி.மு.க. இளைஞர் அணி
பகுதிக் கழகச் செயலாளர்கள்
எஸ்.குமாரவடிவேலு சூரியம்பாளையம்
வி.சி.நடராஜன் வீரப்பன்சத்திரம்
வி.செல்வராஜ் பெரியசேமூர்
பொ.இராமச்சந்திரன் கோட்டை
ஏ.முருகேசன் சூரம்பட்டி
அக்னி டி.சந்திரசேகர் பெரியார் நகர்
கா.லட்சுமண குமார் கொல்லம்பாளையம்
குறிஞ்சி என்.தண்டபாணி கருங்கல்பாளையம்
Jayam Arts
வரவேற்று மகிழும்... கே.டி.சேந்தபுகழன்
மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்
மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் :
பா.ஜாகீர் உசேன் ❖ செ.ரமேஷ் ❖ எஸ்.சசிகுமார் ❖ அ.பார்த்திபன்
பெ.சீனிவாசன் ❖ வி.நவீன்குமார் ❖ அ.அன்பு (எ) அன்பரசன்
ஈரோடு மாநகர தி.மு.க. இளைஞர் அணி


கலைஞர் 100
1924 - 2023
21 – 11 – 2023
செவ்வாய்கிழமை
தி.மு.க. இளைஞர் அணி
செயல்வீரர்கள் கூட்டம்
மற்றும் கழக மூத்த
முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கும்
விழாவிற்கு
வருகை தரும்
நாடும் நமதே!
நாற்பதும் நமதே!
COURAGE IMPACT DECISIVE ACTION
வரலாற்று இயக்கத்தின்
இளைஞர் அணிச் செயலாளர்
இளைஞர் நலன் (ம) விளையாட்டு
மேம்பாட்டுத்துறை அமைச்சர்
இளம் தலைவர்
அவர்களே வருக.. வருக...
மாண்புமிகு சு.முத்துசாமி
வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
ஈரோடு தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்
என்.நல்லசிவம்
ஈரோடு வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்
P.S.சீனிவாசன்
துணைச் செயலாளர் – தி.மு.க. இளைஞர் அணி
அன்புடன் வரவேற்று மகிழும்...
K.E.பிரகாஷ் B.A.,
துணைச் செயலாளர் – தி.மு.க. இளைஞர் அணி


முன்னோடிகள் நம் வழிகாட்டிகள்
முன்னின்று உதவுவோம் அவர் பாதையில்
21.11.2023
ஈரோடு மாவட்டம் பெருந்துறைக்கு
கழக மூத்த முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்க வருகை தரும்
கழக இளைஞரணிச் செயலாளர்
இளைஞர் நலன் (ம) விளையாட்டு
மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை வருக. வருக..
என அன்புடன் வரவேற்கும்...
ARASU ARTS
அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம் எம்.எல்.ஏ.,
அந்தியூர் சட்டமன்ற தொகுதி – ஈரோடு வடக்கு மாவட்டம்.


21 - 11 - 2023
ஒருங்கிணைந்த
ஈரோடு மாவட்ட
தி.மு.க. இளைஞர் அணி
செயல்வீரர்கள் கூட்டம்
மற்றும் கழக மூத்த
முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கும்
விழாவிற்கு
வருகை தரும்
கலைஞர்
100
1924 - 2023
வரலாற்று இயக்கத்தின் இளைஞர் அணிச் செயலாளர் / மாண்புமிகு இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக.. வருக...
மாண்புமிகு சு.முத்துசாமி
வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் / ஈரோடு தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்
என்.நல்லசிவம்
ஈரோடு வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்
அன்புடன் வரவேற்று மகிழும்...
சிந்து ரவிச்சந்திரன் M.A., M.L.,
கழக நெசவாளர் அணிச் செயலாளர்
முன்னாள் வாரியத் தலைவர் - தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம்



கலைஞர் 100
1924 - 2023
21.11.2023
முத்தமிழறிஞர் கலைஞரின் குருகுலமான ஈரோட்டிற்கு வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை
வருக ! வருக ! என வரவேற்கிறோம் !
மாண்புமிகு சு.முத்துசாமி MA.,
மாவட்ட செயலாளர்
வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சி (ம) மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்
ஆ.செந்தில்குமார் B.Com.,
மாவட்ட துணை செயலாளர்
ஜெ.திருவாசகம் ME,MBA.,
மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்
இளைஞர் அணி - ஈரோடு தெற்கு மாவட்ட திமுக